விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 01 சனிக்கிழமை (15.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# புலிகளுடன் தொடர்புடையவரே துப்பாக்கிச் சூடு நடத்தினார்



## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி தர்மபுரம் பிரதேசத்தில் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய ந்தேக நபர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். புலிகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபரை கைது செய்ய முயற்சி எடுக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட விபூசிகா என்ற சிறுமியும் அவருடைய தாயாரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினமிரவு கடத்தப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பாலேந்திரன் ஜெயகுமாரி (வயது 50) மற்றும் அவரது மகள் விபூசிகா (வயது 13) ஆகியோர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் இருவரும் சட்ட வைத்திய அதிகாரியின் முன் மருத்துவ பரிசோதனைக்கு நிறுத்தப்படுவதற்காக வவுனியாவுக்குச் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர் என கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தி

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஐவரை மோதித்தள்ளிய இராணுவ அம்புலன்ஸ்

### கோண்டாவிலில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இராணுவ அம்புலன்ஸ் விபத்தினையடுத்து பெருமளவான இராணுவத்தினர் கனரக வாகனங்களில் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்த அதே வேளை ஆயுதங்கள் தாங்கிய இராணுவத்தினர் அங்கு கூடியிருந்த தமிழ் இளைஞர்களை அடித்து விரட்டியடித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸார் மேற்படி சம்பவத்தை கண்டும் காணாமலுமிருந்ததாகவும் கூறப்படுகின்றது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவத்தினரின் அம்புலன்ஸ் வண்டியும் துவிச்சக்கர வண்டியும் கோண்டாவில் பகுதியில் இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய காரியாலத்திற்கு அருகாமையில்

19 ஆம் பக்கம் பார்க்க..

## யாழ். பல்கலையில் சர்வதேச மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வணிக பீடங்களின் ஆதரவில் சமகால முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு நேற்றுக் காலை 9 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியது.

நேற்றும் இன்றுமாக இரு தினங்களைக் கொண்டதாக இந்த மாநாடு துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் இடம் பெறுகின்றது.

நிலைத்து நிற்கும் அபிவிருத்தி தொடர்பாக மக்களுக்கு அதிகார மூட்டுவது மற்றும் தொழில்துறை வெற்றிக்கான மூலோபாயங்கள் என்ற கருப்பொருளில் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. (எ-11)

## கல்முனையில் முஸ்லிம்கள் பேரணி




(மட்டக்களப்பு)

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் நிறைவேற்றப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஜனாதிபதியையும் நாட்டையும் ஆதரித்தும் கல்முனை பிரதேச முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றில் ஈடுபட்டனர்.

கல்முனை பிரதேசத்திலுள்ள சில பள்ளிவாசல்களும் முஸ்லிம் சமூக அமைப்புகளும் இணைந்த ஏற்பாட்டில் கல்முனை நகரில் நடைபெற்ற இந்த கவனயீர்ப்பு பேரணியில

19 ஆம் பக்கம் பார்க்க..

## மீனவர் பிரச்சினைக்கு உடன்பாடு கிடைத்தது

(கொழும்பு)

இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக இந்திய-இலங்கை இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாக். ஜலசந்தி உள்ளிட்ட பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள், எல்லை தாண்டி வந்ததாகக் கூறி இலங்கை கடற்படையால் அடிக்கடி கைது செய்யப்

19 ஆம் பக்கம் பார்க்க..

## கிளிநொச்சியில் தாயும் மகளும் கைது விடுதலையை வலியுறுத்தி கவனயீர்ப்பு

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள ஜெயக்குமாரி மற்றும் அவரது மகள் விபூசிகாவையும் உடனடியாக விடுதலை செய்யக்கோரி இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரை வவுனியா பேருந்து தரிப்பு நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

கிளிநொச்சியிலுள்ள தர்மபுரம், முசலம்பிட்டி வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் பாலேந்திரன் ஜெயக்குமாரி, மற்றும் அவரது மகள் விபூசிகா பாலேந்திரன் (வயது-13) ஆகிய இருவரும் நேற்று முன்தினம் 13 ஆம் திகதி பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது நீதிக்குப் புறம்பான கைதுகளைக் கண்டித்தும் இரு

19 ஆம் பக்கம் பார்க்க..



## யாழ். குடாநாட்டில் திடீர் வாகனச் சோதனை

### வீதிகள் எங்கும் பொலிஸார் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பரவலாக பொலிஸார் வாகனங்களை தீவிர சோதனைக்கு உட்படுத்திவருகின்றனர்.

வாகனத்தின் வகை, உரிமையாளரின் பெயர் என்பன தொடர்பிலும் பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். நேற்றிரவு மானிப்பாய் வீதியில் இவ்வாறான வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஒருவர் மீது சுமார் மூன்று இடங்களுக்கு மேல் வீதிகளில் வைத்து வீதிச் சோதனையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸாரின் இந் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இதேவேளை பொலிஸாருடன் சிவில் உடை தரித்தவர்களும் காணப்பட்டனர். அவர்களும் பெயர் விபரம் உட்பட அனைத்து விபரங்களையும் பதிவு செய்து வருவதாக கூறப்பட்டது. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலா ளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014.02.17ஆம் திகதிய NP/14/01/Cadre இலக்க கடிதத்திற்கு அமைவாகவும் கீழ்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

01. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
02. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரர் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் எல்லைக்குள் விண்ணப்ப இறுதி தினத்தன்று வசித்து வருபவராகவும் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப் பட்ட வதிவிட சான்றிதழ்/வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
05. தொழில்நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் தேவையான தொழிற்தகைமை சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00 ஐ செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூரணபடுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படவேண்டும்.
02. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு "செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின்போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரிய வரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் நிறுத்தப்படும்.

**விண்ணப்பம் முடிவுத்திகதி**

2014.04.04 திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**பதவிகள்**

1. காரியாலய காரியசகாயர் பதவி (வெற்றிடம் 02)
2. காவலாளி பதவி (வெற்றிடம் 02)
3. வேலை / வெளிக்களத் தொழிலாளர் பதவி (வெற்றிடம் 06)
4. சுகாதாரத் தொழிலாளர் பதவி (வெற்றிடம் 03)
5. கொல்கள காப்பாளர் பதவி ( வெற்றிடம் 01)

**கல்வித்தகைமை**

கல்விப் பொதுதராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஒரே தடவையில் ஐந்து பாடசித்தி உட்பட ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2006A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 11730-120x10-130x10-145x10-160x12-17600 என்ற சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

6. மின் இணைப்பாளர் பதவி (வெற்றிடம் 01)

**கல்வித்தகைமை**

கல்விப் பொதுதராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஒரே தடவையில ஐந்து பாடசித்தி உட்பட ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

**தொழில்சார் தகைமைகள்**

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித்திகதி அன்று ஆறு மாதங்களுக்கு குறையாத வகையில் அங்கீகரிக கப்பட்ட நிறுவனத்தில் இருந்து தொழிற்பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-2-2006-A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 12210-130x10-145x10-160x10-170x12-18600 என்ற சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

7. சாரதிப்பதவி (வெற்றிடம் 01)

**கல்வித்தகைமை**

கல்விப் பொதுதராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஒரே தடவையில ஐந்து பாடசித்தி உட்பட ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

**ஏனைய தகைமைகள்**

01. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை / தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதி திகதிக்கு மூன்று வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
02. மோட்டார் வாகன சாரதியாக 3 வருட அனுபவத்திற்கான சான்றிதழ்
03. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5அடி 2 1/2 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியை கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கான மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
05. பெருந்தெரு விதிமுறைகள் பற்றி சிறந்த அறிவைக்கொண்டிருத்தல் வேண்டும் .

**சம்பளம்**

2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-3-2006-A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 12470 -130x10-145x10-160x10-170x12-18860 என்ற சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவா்.

**குறிப்பு : சாரதி, வேலை / வெளிக்களத் தொழிலாளி, சுகாதார தொழிலாளி ஆகிய பதவிகளுக்காக போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் 08ம் தரத்தில் சித்தியடைந்தவர்களது விண்ணப்பங்களும் கருத்தில் கொள்ளப்படும்.**

**கரைதுறைப்பற்று,**
**முல்லைத்தீவு.**
**15.03.2014**

**சு.ரவீந்திரநாதன்**
**செயலாளர்,**
**பிரதேசசபை**

(சீ-6747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 இந்திய வியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் கைது

(யாழ்ப்பாணம்)

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரிகள் 8 பேரை எதிர் வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மேலும் குறித்த 8 வியாபாரிகளின் கைது குறித்து யாழ். மாவட்ட சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு நீதவான் பணிப்புரை விடுத்தார்.

மேற்படி 8 இந்திய வியாபாரிகளும் யாழ்ப்பாணத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த வேளை விசேட அதிரடி படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று இந்திய வியாபாரிகள் 8 பேரையும் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய வேளையில் நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்திருந்தார்.

மேற்படி வியாபாரிகளிடமிருந்து ஆயிரத்து 800 சேலைகள், 2 ஆயிரத்து 550 சுடிதார்கள், 38 சிறுவர் ஆடைகள், 80 சுடிதார் து[illegible] வகைகள் உள்ளிட்ட பெறுமதிமிக்க ஆடைகள பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

# விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி புறாப்பொறுக்கி பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நெல்லியடிப் பகுதியிலிருந்து அச்சுவேலிப் பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் ஒருவரும், துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவரும் நேருக்கு நேர் மோ[illegible] கொண்டதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-11)

# ரிஷாத் பதியுதீன் மன்னிப்புக்கோரல்

(கொழும்பு)

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நீதிமன்றத்தை அவமதித்ததாக தொடரப்பட்டிருந்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சார்பில் மன்னிப்பு கோரப்பட்டுள்ளதை அடுத்து ,மனுதாரர்கள் முறைபாட்டை விலக்கிக்கொண்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தி, நீதிபதியை அச்சுறுத்தியதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

ஆதரவாளர்களுடைய இந்த நடத்தை தொடர்பில், நீதிமன்றத்தை அவதூறு செய்ததாக பதிமுறையிட்டு அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சில மூத்த சட்டத்தரணிகள் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, நிகழ்ந்த சம்பவங்களுக்காக அமைச்சர் பதியுதீன் மன்னிப்பு கோருவதாகவும், நீதிமன்றத்தை அவமதிக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்றும் அமைச்சர் சார்பாக வாதிட்ட சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (எ-11)

# இன்று ஒரு தகவல்

## வியாபார நேர்மை

வியாபாரம் சிறப்பாக நடக்க வேண்டும் என்றால், வியாபாரத்தில் நேர்மை இருக்கவேண்டும். விற்பவரிடத்திலும் நேர்மை இருக்க வேண்டும், வாங்குபவரிடத்திலும் நேர்மை இருக்கவேண்டும். அப்படி இல்லாமற் போனால், என்ன ஆகும் என்பதற்கு ஓர் அருமையான கதை.

அந்தக்காலத்திலே, ஒரு ராஜாவிடம் ஒரு வழக்கு வந்தது. விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு பிரச்சினை சம்பந்தமானது அந்த வழக்கு. நெல் வியாபாரம் செய்பவர், நெல்லைக் கொள்முதல் செய்வதற்காக கிராமத்தில் வசிக்கும் ஒரு விவசாயியிடம் போனார்.

அவரிடம், எத்தனை வகை நெல் இருக்கிறது என்று காட்டும் படி சொன்னார். விவசாயியும் ஒவ்வொரு வகையான நெல்லாகக் காட்டிக் கொண்டே வந்தார். அவர் அப்படி காட்டி முடித்தவுடன் இவர் "வேறு ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார். "ஏன் கேட்கிறீர்கள்?" என்றார் விவசாயி. "நூறு வராகனுக்கு நெல் வாங்கவேண்டும். அதுதான். எத்தனை வகை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால், அதற்குத் தகுந்தாற் போல் வாங்குவேன்" என்றார் வியாபாரி.

விவசாயி சொன்னார் "நீங்கள் நூறு வராகனுக்கு வாங்கினாலும் இதே நெல்தான். ஒரு வராகனுக்கு வாங்கினாலும் இதே நெல்தான்" என்று. வேறு வழியில்லையே என்று நொந்து கொண்ட வியாபாரி, "அதையே கொடுங்க நூறு வராகனுக்கு" என்றார்.

உடனே விவசாயி, ஒரு மூட்டை நெல்லை எடுத்து அளந்துபோட்டு, "இதைக் கொண்டு செல்லுங்கள்" என்றார். வியாபாரிக்கு அதிர்ச்சி "ஐயா, நான் நூறு வராகன் கொடுத்தேன். நூறு வராகனுக்குள்ள நெல்லைத்தானே நீங்கள் கொடுக்க வேண்டும்" என்றார்.

"இதோ பாருங்கள், பேச்சை மாற்றக்கூடாது. நான் உங்களுக்கு நெல்லை காட்டும்போது என்ன சொன்னேன். 'ஒரு வராகனுக்கு வாங்கினாலும் இதுதான். நூறு வராகனுக்கு வாங்கினாலும் இதுதான்' என்று சொன்னேன். அது மாதிரிதான் செய்திருக்கிறேன்" என்றார் சாமர்த்தியமாக.

வியாபாரி திகைத்துப்போனார். இனி என்ன செய்வது என்று யோசித்தவர், நேராக ராஜாவிடம் சென்று வழக்கு தொடுத்தார் ராஜா. அந்த விவசாயியை அழைத்துவர ஏற்பாடு செய்தார். பின் இருவரையும் விசாரித்தார். "ஐயா, முதலிலேயே நான் தெளிவாக சொல்லிவிட்டேன். 'ஒரு வராகனுக்கு வாங்கினாலும் இதுதான். நூறு வராகனுக்கு வாங்கினாலும் இதுதான்' என்று. இவர் தப்பாக புரிந்து கொண்டு இந்த வழக்கை இங்கே கொண்டு வந்திருக்கிறார்" என்றார் விவசாயி.

ராஜாவுக்கு ஓர் உண்மை விளங்கியது. அதை வெளிக்கொண்டு வருவதற்காக ஒரு தந்திரம் செய்தார். விவசாயியைப் பார்த்து, "நீங்கள் மூன்று நாட்கள் வியாபாரி வீட்டில் தங்கவேண்டும். அவர் வீட்டிலேதான் சாப்பிட வேண்டும். அவர் எந்த அளவு சாப்பிடுகிறாரோ அதிலே பாதிதான் நீங்கள் சாப்பிடவேண்டும். இதை நிறைவேற்றிவிட்டு, நான்காவது நாள் என்னிடத்தில் வாருங்கள்" என்று சொல்லி விட்டார். மன்னன் சொல்லுக்கு மறுசொல் ஏது?" சரி "என்று ஒப்புக்கொண்டு வியாபாரி வீட்டிற்கு விவசாயி சென்றார்.

இதற்கிடையில் ராஜா, வியாபாரியின் காதிலே இரகசியமாக ஒரு செய்தியைச் சொன்னார். "சமைத்து முடித்தவுடன் நீ வயிராற சாப்பிட்டு விட்டு, அவரோடு சேர்ந்து சாப்பிடுகிற மாதிரி பாவனை செய்" என்று சொல்லி விட்டார்.

விவசாயி வியாபாரியின் வீட்டிற்கு வந்தார். இருவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். ஏற்கனவே வியாபாரி வயிறு முட்ட சாப்பிட்டு விட்டிருந்தார். அதனால் தன் தட்டிலே ஒரே ஒருபருக்கையை மட்டும் வைத்துக்கொண்டு வியாபாரி சாப்பிட ஆரம்பித்தார். அதிலே பாதியை விவசாயிக்குக் கொடுக்க வேண்டும். ஆகவே பாதி பருக்கையை எடுத்து விவசாயி தட்டில் வைத்தார். பின் அவரிடம் "நான் சாப்பிடுவதில் பாதிதானே உனக்குக் கொடுக்கச் சொல்லி இருக்கிறார், ராஜா" என்றார். விவசாயி பதறி விட்டார்.

ராஜாவிடம் ஓடோடி வந்தார், விவசாயி. வந்ததும் வராததுமாக, "ஐயா இந்த மாதிரி சாப்பிட்டால் நான் உயிர் வாழ்வதே கஷ்டம்" என்றார். "நான் சொன்ன மாதிரிதானே அவர் செய்திருக்கிறார். அவர் சாப்பிட்டதில் பாதியைத் தானே உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்" என்று சொன்னவுடனே தான் இந்த விவசாயிக்கு தான் செய்த தப்பு என்ன என்பது புரிந்தது.

நாம் வார்த்தை ஜாலத்தாலே வியாபாரியை ஏமாற்றினோம். அது மாதிரி, ராஜா வார்த்தை ஜாலத்தை வைத்து நமக்குப் புத்தி சொல்லி விட்டார் என்று புரிந்து கொண்டு "மன்னித்து விடுங்கள் ராஜா" என்றார். "ஒழுங்காக நூறு வராகனுக்குள்ளே நெல்லை அளந்து கொடுத்துவிடு". என்று ராஜா உத்தரவிட்டார்.

வியாபாரத்தில் இப்படி சொல் சாதுரியம் செய்கிறவர்கள் சிலர் உண்டு.

அலுவலர்கள் பலர் குடியிருக்கும் குடியிருப்புபகுதியில் ஒருவர் வண்டியில் காய்கறிகளை வைத்து விற்றுக் கொண்டு வருவார்.

ஒருநாள், "கல்கட்டா புடலங்காய் வாங்கிப் பாருங்கள் சுவையாக இருக்கும்" என்று கூவி புடலங்காயை விற்றார்.

கொல்கத்தாவிலிருந்து வந்திருக்கிற புடலங்காய் அது என நினைத்து பெண்கள் நிறைய பேர் அதை வாங்கினார்கள். சமைத்துச் சாப்பிட்டுப் பார்த்தால், சாதாரண புடலங்காய்க்கும் இந்த கல்கட்டா புடலங்காய்க்கும் சுவையில் எந்த மாறுபாடும் தெரியவில்லை.

மறுநாள், பெண்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து வியாபாரியைத் திட்ட ஆரம்பித்தார்கள். அவர் சாதுரியமாகச் சொன்னார், "என்னை யாரும் திட்டாதீர்கள். நேற்று நீங்கள் வாங்கிய புடலங்காய்கள் எல்லாம் வளைந்து சுருண்டு இருந்ததைப் பார்த்திருப்பீர்கள். அவை வழக்கம் போல் நீளமாக இல்லை. காரணம், அவை வளரும்போது அவற்றிற்குக் கல் கட்டப்படவில்லை. அதனால்தான் அதைக் கல் கட்டாப் புடலங்காய் என்றேன்" என்றார்.

இளசை சுந்தரம்

# தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி நெறிகளுக்காக பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேசசெயலக விதாதா வள நிலையத்தில் பல்வேறு பட்ட தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகளுக்காகப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். இதற்கமைய,

உணவு பதனிடல் தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளில்,

ஊறுகாய் தயாரித்தல் (மாங்காய், எலுமிச்சம்பழம், மிளகாய், இறால் ஊறுகாய்), கோடியல் தயாரித்தல், யோகட் தயாரித்தல், சோஸ் தயாரித்தல், மரக்கறிகள் உலர்த்திப் பதனிடல், கடல்வள உணவுப் பொருட்கள் பதனிடல், வெள்ளை தேங்காய் எண்ணை பிரித்தெடுப்பு, பேக்கரி உற்பத்திப் பொருட்கள், பொதியிடல் தொழில்நுட்பம், (உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்கள்) ஆகியவை பயிற்றுவிக்கப்படவுள்ளது. இதேவேளை கணனி தொழில்நுட்ப பயிற்சி நெறிகளில், கணனி வன்பொருள் தொழில்நுட்பம், கணனி வலையமைப்பு தொழில்நுட்பம் Computer Graphic Design, Website Development Techniques, Internet & E mail, என்பனவும் பயிற்றுவிக்கப்படவுள்ளது.

கைத்தொழில் தொழில்நுட்ப பயிற்சி நெறிகளில்

liquid Soap தயாரித்தல், Binder Gum தயாரித்தல், ஊது பத்தி தயாரித்தல், Toner Filli ng, Water Soluble medicinal pa lm தயாரித்தல், என்பனவும் பயிற்றுவிக்கப்படவுள்ளது. ஏற்கனவே உருவாக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கணக்குப் பதிவேடுகளைப் பேணும்முறையும் உற்பத்திச்செலவீனங்களைக் கணிப்பிடுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை (work shop on book keeping & cost calculation procedures for entrepreneurs) இடம் பெறவுள்ளது.

இதற்கான பதிவினை எதிர்வரும் 20 ஆம் திகதி க்கு முன்னர் மேற்குறித்த விதாதா நிலையத்தில் மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# மருத்துவ முகாமும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அறிவாலயமும் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மாதாந்த மருத்தவ முகாமும் கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை " ஆரோக்கிய வாழ்வுக்கு ஆழச்சுவாசிப்பதன் அவசியம்" என்ற கருப்பொருளில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெறும்.

இதில் 3 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் வைத்திய பரிசோதனையும், ஆலோசனைகளும் பிற்பகல் 4 மணி தொடக்கம் 5.30 மணி வரை கருத்தரங்கு அறிவாலயத் தலைவர் அ.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் அ.ரகுபதி, பேராசிரியர் கே.தேவராசா, சுக நலக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரன், இளைப்பாறிய அதிபர் கே.கனகராசா ஆகியோர் இக் கருத்தரங்கில் பங்குபற்றவுள்ளனர். (2)

# வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யா/ நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கு.ஸ்ரீபாஸ்கரன், சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே பங்கு பற்றும் அனைத்து விளையாட்டுக் கழக உறுப்பினர்களையும் விளையாட்டு ஆர்வலர்களையும் நாளைய தினம் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 20 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 |
| தக்காளி | 30 | 30 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 35 | 40 |
| கோவா | 30 | 30 | 40 |
| கரட் | 100 | 90 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 40 | 70-100 |
| பெரிய வெங்காயம் | 55-70 | 50 | 80 |
| பாகற்காய் | 120 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 20 | 40 |
| பயற்றங்காய் | 60 | 50 | 80 |
| லீக்ஸ் | 50 | 50 | 80 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 400 |
| போஞ்சி | 60 | 60 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | - |
| கீரை - 1 பிடி | 10 | 5-10 | 25 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 30-40 | 35-40 |
| இராசவள்ளி | 70-120 | 80 | 100 |

# இராசி பலன்

15.03.2014

(பங்குனி 01, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு

சதுர்த்தசி முன்னிரவு 10.24 மணிவரை

மகம் முற்பகல் 11.21 மணிவரை

இராகுகாலம் 9.21-10.51 மணிவரை

சுபநேரம் 3.21-4.51 மணிவரை

அமிர்தசித்தம்

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்** சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, தன வரவில் இருந்த தடைகள் அகலும்.

**மிதுனம்** குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்துவதற்காக முக்கிய பொறுப்புக்களை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், சுகாதார ஒற்றுமை மேலோங்கும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.

**கடகம்** சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொலை தூரத்திலிருந்து புதிய தகவல்கள் வந்து சேரும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**சிங்கம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், திடீர் பயணங்கள் உருவாகும்.

**கன்னி** சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், குடும்பத்தில் அனைவரையும் ஆறுதல் செய்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** திடீர் பண வரவால் மகிழ்ச்சியடைவீர்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் பிரியம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உற்சாகமான நாள்.

**தனுசு** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், குடும்பங்களிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், அபூர்வ சந்திப்புகள் இடம்பெறலாம்.

**மீனம்** நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உடல் நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, பகைவர்கள் விலகுவர்.

வளவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கின் மாபெரும் போர் இரு அணிகளும் தடுமாற்றம்

## இரண்டாம் நாளில்

க.மதீசன்








சுழலின் ஆதிக்கம் தொடர்ந்து செல்வாக்கு செலுத்த வடக்கின் மாபெரும் போரின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் இரண்டுகல்லூரிகளும் போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளன.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் லோகதீஸ்வரின் சுழலின் மயாஜாலம் தொடர யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி நேற்று தனது இரண்டாவது இனிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 94 ஓட்டங்களை பெற்றுள்ளது.

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் கிரிக்கெட் போர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இரு கல்லூரி கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் கோலாகலமாக மேளதாள பாண்ட் வாத்தியத்துடன் அமோகமாக ஆரம்பமாகியது.

நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 50 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டினை இழந்து தடுமாறி வந்தது.

நேற்று தனது ஆட்டத்தை தொடர்ந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன.

ஒரு கட்டத்தில் சென் ஜேன்ஸ் கல்லூரி அணி 43.4 ஓவர்களில் 9 விக்கெட்டினை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று தடுமாறி வந்தது பின்னர் இறுதி விக்கெட்டுக்காக இணைந்த எம். நிலோஜன் மற்றும் ஆர். லோகதீஸ்வர் ஆகியோர் நிதானமாக ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இருவரும் தமக்கிடையே இணைப்பாட்டமாக 54 ஓட்டத்தினை பகிர்ந்து கொண்டனர். சென் ஜோன்ஸ் அணி முதலாவது இனிங்சில் 56 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 122 ஓட்டங்கள் என்ற கௌரவமான இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பாக நிலோஜன் ஆட்டமிழக்காது 22 ஓட்டத்தினையும் லோகதீஸ்வர் 21 ஓட்டத்தினையும், சிந்துஜன் 18 ஓட்டத்தினையும், ஜெனிபிளமின் 16 ஓட்டத்தினையும், துவாரகசீலன் 10 ஓட்டத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் மத்திய கல்லூரி சார்பாக நிரூபன் 17 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 25 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டினையும் மதுசன் 20 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 40 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பின்னர் 40 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த மத்திய கல்லூரி அணி சென். ஜோன்ஸ் கல்லூரியின் லோகதீஸ்வரின் சுழலில் மீண்டும் சிக்கினர். அவ் அணியின் விக்கெட்டுக்கள் தொடர்ந்து சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேரமுடிவில் மத்திய கல்லூரி அணி 94 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டினை இழந்து 134 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

இரண்டாவது இனிங்ஸ் பந்து வீச்சில் லோகதீஸ்வர் 5 விக்கெட்டினை கைப்பற்றினார்.

போட்டியின் மூன்றாவதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும். (சு-23)


## பொன் அணிகளின் போர்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்குமிடையிலான பொன் அணிகளின் போர்

# ராஜன் கதிர்காமர் ஞாபகார்த்த ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி




யாழ்ப்பாணக் கல்லூரி

ஒரு நாள் போட்டி இன்று இடம் பெறவுள்ளது.

ராஜன் கதிர்காமர் ஞாபகார்த்த 26வது கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான பொன் அணிகளின் போர் போட்டிக்கு இணைவாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டி இடம்பெறவுள்ளது. இது 26வது போட்டியாக இடம்பெறவுள்ளது. இதுவரை இடம்பெற்ற 26 போட்டிகளின்படி 18 போட்டிகளை புனித பத்திரிசியார் கல்லூரி கைப்பற்றியுள்ளதுடன் 6 போட்டிகளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வென்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. வீ.எஸ். சொலமன், புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர்வண. ஜெரோம்செல்வநாயகம் ஆகியோர் இணைந்து போட்டிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (சு-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செயற்கைமுறை சினைப்படுத்தல் சேவை மீண்டும் ஆரம்பம்

## கோப்பாய் கால்நடை வைத்தியர் தெரிவிப்பு

கடந்த வருட டிசம்பர் மாதம் இறுதிப்பகுதி மற்றும் ஜனவரி மாதத் தொடக்க காலப்பகுதியில் கால்வாய் நோய்த்தாக்கம் ஏற்பட்டதன் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த செயற்கைமுறைச்சினைப்படுத்தல் சேவை கடந்த 12 ஆம் திகதி மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் கால்நடை வைத்தியர் டாக்டர் த.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இச் சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்புவர்கள் பூதர்மடம், கோப்பாய் எனும் முகவரியிலுள்ள எமது அலுவலகத்துடன் அல்லது 021 223 1284 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி கோப்பாய் கால்நடை வைத்தியப் பிரிவினுள், நீர்வேலி வடக்கு (ஜே/269) கிராம சேவையாளர் பிரிவில் கால்வாய் நோய்த் தாக்கம் முதன்முறையாக எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து நீர்வேலி தெற்கு (ஜே/268), நீர்வேலி மேற்கு (ஜே/270), சிறுப்பிட்டி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி ஆகிய இடங்களில் கால்வாய் நோய் பரவலாக காணப்பட்டது.

இவ்வாறான நிலையில் மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் (கால்நடை நோய்க் கட்டுப்பாடு), கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வட மாகாணப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர், மாவட்ட விலங்குநோய் புலனாய்வு உத்தியோகத்தர், கால்நடை வைத்தியர், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், தனியார், தடுப்பூசி ஏற்றுனர்கள் என்பவர்களின் அயராத சேவை மற்றும் பண்ணையாளர்களின் ஒத்துழைப்புக் காரணமாக கால்வாய் நோய் தாக்கம் தற்போது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

நோய்த்தாக்கம் ஏற்பட்டதன் காரணமாக செயற்கை முறைச்சினைப்படுத்தல்சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. நோயை மேலும் பரவாது தடுப்பதற்காகவே இச்சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

எனவே இனிவரும் காலங்களிலும் மக்கள் கால்வாய் நோய் தொடர்பாக அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளின் போது பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (2)

## குருபூசைத் தினம்

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் குருபூசைத் தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்தோடு நிலைய மண்டபத்தில் இரவு 7.30 மணிக்கு நிலையத் தலைவர் ப.சிவசுப்பிரமணியம் தலைமையில் செயற்குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளதனால் உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு நிலையச் செயலாளர் சி.தவச்செல்வம் அறிவித்துள்ளார். (2-9-10)

## நிர்வாக சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் வலி.வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஊடக இணைப்பாளர் ஆ.தரணிதரன் அறிவித்துள்ளார்.(2-9)

# அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்க அரசாங்கத்திற்கு விருப்பமில்லை

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியாமைக்கு அரசாங்கமே காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை எட்டும் முயற்சிக்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் இடைநிறுத்திக் கொண்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். 2011 ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டை அரசாங்கம் மதித்துச் செயற்படத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டத்திற்கான முனைப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முடக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு சுமத்தி வரும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள்மனிதவுரிமைபேரவை அமர்வுகளில் பங்கேற்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளாமையே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாமைக்கான காரணம் என தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விடயத்தில் கூட்டமைப்பின் பிழைகள் கிடையாது எனவும், அரசாங்கம் மெய்யான நோக்கத்துடன் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க நாட்டம் காட்டவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# கட்டடங்கள் திறப்புவிழா

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை சுய கற்றல் அபிவிருத்தி செயற்பாட்டு மண்டபம், ஊர்காவற்றுறை பொதுச்சந்தை மற்றும் வடக்கின் வசந்தம் விசேட செயற்றிட்டத்தில் புனரமைப்புசெய்யப்பட்ட அண்ணா சனசமூக நிலையம், முன்பள்ளி மற்றும் தம்பாட்டி காந்திஜீ முன்பள்ளி ஆகியவற்றின் திறப்புவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக பிரதேச ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.கௌரவ விருந்தினராக அமைச் சரின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.குகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு தம்பாட்டி காந்திஜீ முன்பள்ளியும் முற்பகல் 10.45 மணிக்கு ஊர்காவற்றுறை சுய கற்றல் அபிவிருத்தி செயற் பாட்டு மண்டபமும் முற்பகல் 11.15 மணிக்கு ஊர்காவற்றுறை பொதுச் சந்தை கட்டடமும் முற்பகல் 12.15 மணிக்கு அண்ணா சனசமூக நிலைய முன்பள்ளி கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளது. (2)


# பதவி வெற்றிடம்

- உதவி ஆசிரியர்
- அலுவலகச் செய்தியாளர் (உள்ளகம், வெளியகம்)

## உதவி ஆசிரியர்

தகைமை :- 35 தொடக்கம் 55 வயது வரையான இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்

கல்வி :-க.பொ.த. உயர் தரத்தில் சித்தி

ஊடகத்துறை அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் கல்வித் தகைமை கவனத்தில் கொள்ளப் படமாட்டாது.

## அலுவலகச் செய்தியாளர்

தகைமை :- 28 தொடக்கம் 50 வயது வரையான இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

கல்வி :- க.பொ.த.உயர்தரத்தில் சித்தி

குறிப்பு

i. யாழ்.நகரை அண்மித்த தூரங்களில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ii. எட்டிய தூரத்தில் இருப்பவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மேற்குறித்த தகைமைகளும் ஆர்வமும் உடையவர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 15.03.2014 இன்று (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 48.5 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L / வாகன உரிமையாளர் (பஸ்)<br>தொ.இ: B/2925 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 58 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Ba, Ma / விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/2930 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 47.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2926 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4 செவ் 2 இல்<br>உயரம்: 152 cm<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: G/2931 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 64.75<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / பிறிண்டிங் வேலை (சொந்தம்)<br>தொ.இ: B/2928 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 29.75 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, CIME – 3rd year / வங்கியாளர்<br>தொ.இ: G/2933 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: B/2929 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 33 உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (UK சிற்றிசன்)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/2935 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணிய கிராம வேலைத்திட்டம்

(மானிப்பாய்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புண்ணிய கிராம வேலைத் திட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தான திருமண மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.


சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசு கலந்து கொள்ள வுள்ளார்.

ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ சோ. சிவகுமாரக் குருக்கள் வழங்கவுள்ளார்.

அத்தோடு நந்திக் கொடியேற்றல், கோமாதா பூஜை, சமுதாய நெறிப்படுத்தலில் இந்து மதம் என்னும் தலைப்பில் ஆசிரியர் க. ஈஸ்வரனின் சிறப்புப் பேச்சு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள், மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்குதல் என்பன இடம்பெறவுள்ளன.

எனவே ஆனைக்கோட்டை கரைப்பிரான் பகுதியை புண்ணிய கிராமமாக மாற்றுவதற்கு அனைவரையும் ஒன்றிணையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-9-23)




# பாலியல் துஷ்பிரயோகங்களை கண்டித்து நெல்லியடி நகரப்பகுதியில் ஆர்ப்பாட்டம்

## 10 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிப்பு







வடமாகாணத்தில் அதிகரித்துள்ள பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் துஷ்பிரயோகங்களை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நெல்லியடி நகரப் பகுதியில் வடமாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல நூற்றுக் கணக்கான பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், மகளிர் அமைப்புக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு குற்ற செயல்களுக்கு எதிராக கோசங்களை எழுப்பினர்.

அதில் குடி வீட்டுக்கும் கேடு நாட்டுக்கும் கேடு, சிறுவர்கள் எங்கள் தேசத்தின் விலை மதிப்பில்லாத சொத்துக்கள், சட்டவிரோத கசிப்பு உற்பத்தியினை முற்றாக ஒழிப்போம், புகை எமது சமுதாயத்தின் பகை, எமது பொருளாதார தகுதிக்கு அப்பால் கடன் பெறுவதை தவிர்ப்போம் போன்ற வசனங்களை உள்ளடக்கிய கோசங்கள் எழுப்பியவாறு நெல்லியடியில் இருந்து கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு பேரணியாக சென்றடைந்தனர்.

சென்றடைந்த பேரணி பிரதேச செயலர் எஸ்.சிவசிறியிடம் 10 கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜரினை 5 மாவட்ட அரச அதிபர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு பொது அமைப்பின் பிரதிநிதி சார்பாக தம்பிமுத்து கையளித்தார்.

அத்துடன் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கரவெட்டி பருத்தித்துறை பிரதேச செயலர்களுக்கும் இம் மகஜர் கையளிக்கப்பட்டது.

சமூகவிழுமியங்களைப்பாதுகாப்போம்எனும் தலைப்பில் ஆரம்பிக்கப்பட்ட அம் மக ஜரில், அண்மைக்காலமாக வடபகுதியில் பெண்களும் சிறுவர்களும் பாலியல் துஷ்பிரயோகங்கத்துக்கு உட்படுவது அதிகரித்துள்ளதனால் அவர்களுக்கான அதி உச்ச பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

கலாசார சீரழிவிற்கான சகல விடயங்களையும் பிரதேசத்திலிருந்து நீக்குதல், எமது கலை, கலாசார, பண்பாடு என்பவற்றை பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் ஊடாக பாதுகாத்தல், சட்ட விரோதமான முறையில் சில இடங்களில் அதிகரித்துள்ள கசிப்பு, போதைவஸ்து பாவனை என்பவற்றை தடுத்தல்.

மதுபாவனைக்கு அடிமையாகவரும் இளைய சமூகத்தைபாதுகாக்கமதுபாவனைக்குகட்டுப்பாடு விதித்தல், இளைஞர்கள் வேலை வாய்ப்பின்மையாலே பல்வேறு சமூகவிரோதமானசெயற்பாடுகளில் குழுக்களாக இணைந்து வன்முறையில் இறங்குகின்றதனால் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல், மக்களுக்கு தவறான ஆலோசனைகளைவழங்கும் நிதி வாடகைக் கொள்வனவு காப்புறுதி நிறுவனங்களின் உரிமங்களை மீளாய்வு செய்தல், சட்டவிரோதமான முறையில் மீற்றர்வட்டி பணக்கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.

சமூக விரோத செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் கையூட்டு பெறுபவர்களையும் வழங்குபவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தல் போன்ற கோரிக்கைளை அரச மற்றும் சட்ட நிறுவனங்களூடாகவும் சமூக, சமய அமைப்புக்கள் ஊடாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

அங்கு வடமாகாணசபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் உரையாற்றுகையில், எமது தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பாலியல் துஷ்பிரயோகங்கள், சட்ட விரோத மது உற்பத்திகள், சட்டவிரோத பணக்கொடுக்கல் வாங்கல்கள் போன்றவற்றிற்கு எதிராக வடமாகாணத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் எமது போராட்டங்கள் தொடரவுள்ளதாக தெரிவித்தார்.

இவ் ஆர்ப்பாடத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சரவணபவன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான சித்தார்த்தன், கஜதீபன், சிவயோகன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். அத்துடன் பிரதேச சபை தவிசாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் என பெரும் திரளானோர் கலந்துகொண்டனர். (2-9-24-10)




# வடக்கில் இராணுவம் வெளியேறினால் மட்டுமே விவசாயம் முழுவடிவம் பெறும்

## கனடா குழுவினருக்கு ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளின் நிலங்கள் மற்றும் விவசாய திணைக்களங்களிற்கு சொந்தமான காணிகளை ஆக்கிரமித்து இருக்கும் இராணுவம் வெளி யேறினால் மட்டுமே வடக்கில் விவசாயம் முழுவடிவம் பெறும் என கனடா குழுவிற்கு வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு நாடகள் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்ட கனடா தூதரக குழுவினர் விவசாய அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சரை நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் சந்தித்து மாகாணத்தின் விவசாயத்தின் தற் போதைய நிலை குறித்து அறிந்து கொண்டனர்.

இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர மேலும் தெரிவிக்கையில்,

வடக்கின் பல்வேறு இடங்களில் எமது விவசாய நிலங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். இதனால் விவசாய நடவடிக்கைகள் முழுமையான முறையில் நடைபெறவில்லை. அதன்படி வலி.வடக்கில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலும் உல்லாச விடுதிகள், பார்சாலைகள் அமைத்து வியாபாரம் செய்தல் மற்றும் [illegible] வியாபாரம் போன்றவற்றிலும் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

எனவே இராணுவம் விவசாய நிலப்பரப்புக்களில் இருந்து முற்றுமுழுதாக விலகிக் கொண்டால் மட்டுமே விவசாயத்தில் வடக்கு தன்னிறைவைக் கொண்டுவரும். மேலும் விவசாயத்தில் நவீன தொழில் நுட்ப முறைகளை பயன்படுத்தி விவசாயத்தினை வடக்கில் மேற்கொள்ள அதற்கான உபகரணம் மற்றும் பயிற்சிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

அத்துடன் தென்னிலங்கையில் இருந்து வரும் பால் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் மிகவும் குறைந்த விலையில் பாலினைக் கொள்வனவு செய்து வருகின்றன.

அதில் இருந்து கிடைக்கும் வருமானமும் தென்னிலங்கைக்கு தான் செல்கிறது இதனால் வடக்கில பால் விற்பனை செய்பவர்கள் மிகவும் நட்டத்தையே எதிர்கொள்கின்றனர்.

எனவே வடக்கில் பால் கொள்வனவு செய்யும் வசதிகள், தொழிற்சாலைகளையும் உருவாக்கி அதனூடாக பாலில் இருந்து பெறக் கூடிய ஏனைய பொருட்களையும்செய்வதற்கான உதவிகளை வழங் குமாறும் அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். முடிந்தளவு முயற்சிகளை மேற்கொள்வதாக அவர்கள் என்னிடம் தெரிவித்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனமும் அதனது தொழில்சார் பங்களிப்பும்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வடபுலத்து விவசாய அபிவிருத்தியில் அரசாங்க திணைக்களங்களின் பங்களிப்புடன் தனியார் நிறுவனங்களின் பங்கும் அளப்பரியது. இதனை சமகாலத்தில் உணர்ந்துள்ள நிதிவழங்கும் நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களின் அபிவிருத்திக்கு அண்மைக்காலமாக முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

உள்ளூரில் விவசாய பெருமக்களுக்கு உதவும் முகமாக உருவாக்கப்பட்ட வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

விவசாய பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் பல்வேறு வகையான திட்டங்களை உள்வாங்கி அவற்றை விவசாய பெருமக்களின் அபிவிருத்திக்காக முன்னின்று செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது. இதுபோன்ற தனியார் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கு மேலும் கைகொடுத்து உந்துதல் கொடுக்க வேண்டியது மிகமிக அவசியமானதாகும். இடர்காலங்களின் போது உருவாக்கம் பெற்ற இந்நிறுவனம் பின்னர் சிறிது சிறிதாக தமது வல்லமைக்கேற்ப திட்டங்களை உள்வாங்கி பல்வேறுபட்ட நிதிநிறுவனங்களின் அனுசரணையுடன் மிகப்பெரிய சேவையை செய்து வருவது வரவேற்புக்குரியதும் பாராட்டுக்குரியதுமாகும். விவசாயிகளுக்கான தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் இந்நிறுவனத்தில் செய்யப்படும் திட்டங்களும் செயற்பாடுகளும் உள்ளூர் நிறுவனமொன்றின் அடிப்படைத் தேவையைத் தாங்கி நிற்கின்றதுடன் அதனை மேலும் கைகொடுத்து ஊக்கங்கொடுத்து விருத்தி செய்து விட வேண்டியதும் எமது கடமையாகும்.

மாறாக தனியார் நிறுவனமாக இயங்குவதால் இதற்கு நெருக்குவாரங்கொடுத்து அதனது செயற்பாடுகளுக்கு இடர்பாடுகளை ஏற்படுத்துவதை உன்னிப்பாக கவனித்து தடுத்திடவும் நாம் முன்வரவேண்டும். முற்றுமுழுதாக வட்டுக்கோட்டை பகுதி இளையவர்களை உள்வாங்கிய நிறுவனமாக இந்நிறுவனம் இயங்குவது சிறப்புக்குரியது. ஆண்களும் பெண்களுமாக பல்வேறு இடர்களுக்கும் மத்தியில் அளப்பரிய தொண்டினை ஆற்றிவரும் உள்ளூரில் இயங்கும் இது போன்ற நிறுவனங்களினை இனங்கண்டு ஊக்குமளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இதன்மூலம் தான் வெளிநாட்டு மற்றும் தென்பகுதி நிறுவனங்களின் அசுர வேகத்தில் உள்ளிறங்கும் உற்பத்தி பொருட்களின் ஆதிக்கத்தினை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடிவதுடன் உள்ளூர் தேவைக்கான விவசாய உள்ளீடுகளை உள்ளூரிலேயே உற்பத்தி செய்து இங்குள்ள இளையவர்களுக்கு அதில் வேலைவாய்ப்பையும் நாம் ஏற்படுத்திக்கொடுக்க முடியும்.


"என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில் "என்னும் பொன்மன செம்மலின் வாக்கு எமக்கே பொருந்துகிறது பார்த்தீர்களா! எமக்குள்ள வளத்தை நாம் இன்னும் சரியாக அறிந்து கொள்ளவில்லை, புரிந்தும் கொள்ள வில்லை. இக்கரைக்கு அக்கரை பச்சை ஆனால் வரட்சி துவட்டியெடுத்தும் இக்கரை பச்சையாக இருப்பது எம்மவருக்கு புரியவில்லை, இங்கு வந்து போகும் தென்பகுதி மக்களும் புலமையாளர்களும் இந்த மண்ணைப்பார்த்து வியந்து போவதும் எமக்கு விளங்கவில்லை. இந்த மண்ணில் இடர்பட்டு, துவண்டு, தவழ்ந்து, எழுந்து வாழும் மனிதர்களாகிய எங்களுக்குள் தலைமையும் தனித்துவமும் இருப்பதை நாம் இன்னுமா அறியமுடியவில்லை.

உள்ளூரில் நடந்தேறிய இவ்வளவு பிரச்சினைகளுக்குள்ளும் தாக்குப்பிடித்து உருக்கொண்டு எழும் வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் இதற்தெல்லாம் நல்லதொரு உதாரணம்.(தொடரும்)

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 49-I**



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்





உற்பத்தியாகும்
ரைக்கோடேர்மா பூஞ்சணம்

# பத்து இலட்சம் கையொப்பங்கள் திரட்டும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

ஜெனீவாவில் இலங்கைக்கெதிராக கொண்டு வரவுள்ள பிரேரணையை எதிர்த்து பத்து இலட்சம் கையொப்பங்களை திரட்டும் 'ஜன பல நெகும' என்னும் நிகழ்ச்சித் திட்டமொன்று நேற்று தங்காலை ஹேனகடுவ ரஜமகா விகாரையிலிருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் வழிகாட்டலின் பேரில இணைந்த தொழிற்சங்க கூட்ட மைப்பு மற்றும் உதவிச் செயலா ளர்களின் சங்கத்தினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்ய ப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தங்காலையிலிருந்து கொழும்பு நோக்கி நடமாடும் வாகனக் கண்காட்சி, ஒருங்கிணைந்த வீதி நாடகக் காட்சி என்பனவும் நடத்தப்படவுள்ளன.

நேற்று தங்காலையிலிருந்து வெலிகம வரையிலும் இன்று அஹங்கமவிலிருந்து பலப்பிட்டிய வரையிலும் நாளை அளுத்கமயிலிருந்து பாணந்துறை வரையிலும் நாளை மறுதினம் மொரட்டுவயிலிருந்து பெல்லங்வில ரஜமகா விகாரை வரையிலும் எதிர்வரும் 18 ஆம் திகதியன்று பொரலஸ்கமுவ முதல் பேலிய கொடை வரையிலும் மறுநாள் 19 ஆம் திகதியன்று கிரிபத்கொடையிலிருந்து கம்பஹா வரையிலும் 20 ஆம் திகதியில் ஏக்கல முதல் பேலியகொடை வரையிலும் 21 ஆம் திகதியன்று பேலிய கொடை முதல் கோட்டை புகையிரத நிலையம் வரையிலும் இந்த பேரணி நடத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## மாணவர்கள் கௌரவிப்பு விழா

கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கியினால் 2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குபிரதமவிருந்தினராககிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபர் திருமதிறூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்புவங்கியின் வடபிராந்திய முகாமையாளர் வி.வி.கிறேசன்,வலயக்கல்விபணிப்பாளர்க.முருகவேல் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக சின்மயாமிசன் வதிவிட ஆச்சாரியார் சுவாமிஜாக்ரத சைதன்யா, கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் அ.பங்கையற் செல்வன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

748

## வெயிலும் நிழலும்

அன்று சக்கரவர்த்தி அக்பர் ஏதோ காரணத்தால் காலையிலிருந்தே எரிச்சலுடன் இருந்தார். அவருடைய கோபத்தைத் தணிக்க விரும்பிய பீர்பல், "பிரபு! நீங்கள் இவ்வாறு இருப்பது சிறிதும் நன்றாகவில்லை. சிறிது சாந்தமாக இருக்கக்கூடாதா?" என்று பணிவாகக் கூறினார்.

"எப்போது சாந்தமாக இருக்க வேண்டும், எப்போது கோபமாக இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். நீ சொல்ல வேண்டியது இல்லை!" என்று அக்பர் பீர்பால் மீது எரிந்து விழுந்தார். "அதற்கு சொல்லவில்லை பிரபு! சிடுசிடுவென்று இருந்தால் இயற்கையில் அழகான உங்கள் முகம் விகாரமாக மாறி விடுகிறது!

அதனால்..." பீர்பாலை இடைமறித்த அக்பர் "என்ன தைரியம் இருந்தால் என்னை சிடுமூஞ்சி என்றும் விகாரமானவன் என்றும் குறிப்பிடுவாய்? இனி. உன் முகத்தில் விழிக்க நான் விரும்பவில்லை! எங்காவது கண்காணாத இடத்திற்கு ஒழிந்து போ!" என்றார். இதைக் கேட்டு மனமுடைந்த பீர்பால் உடனே அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டார்.

அடுத்த நாள் அக்பர் தர்பாருக்கு வந்ததும் சபையில் பீர்பால் மட்டும் காணப்படாததை கவனித்த அக்பர் அவரைப்பற்றி விசாரித்தார். தர்பாரில் ஒருவர் எழுந்து நின்று, "பிரபு! நேற்று நீங்கள் அவர்மீது கோபமுற்று இந்த நகரத்தை விட்டுக் கண்காணாத இடத்திற்குச் சென்று விடுமாறு கட்டளையிட்டீர்களாம்!



அதனால் பீர்பால் தலைநகரை விட்டுச் சென்று விட்டார்!" என்றார். "அடடா! பீர்பால் உண்மையாகவே சென்றுவிட்டாரா?" என்று அக்பர் வருந்தினார். தான் அவ்வளவு கடுமையாக பேசியிருக்கக்கூடாது என்று உணர்ந்த அக்பர் தன் தவறுக்காக வருந்தினார்.

பீர்பாலை மீண்டும் சந்திக்க வேண்டுமென்று அவர் மனம் அடித்துக் கொண்டது. ஆனால் பீர்பால் எங்கு சென்று விட்டார் என்று யாருக்கும் தெரியவில்லை. அன்று முழுவதும் பீர்பால் எங்கு சென்றிருக்கக்கூடும் என்பது பற்றியும், அவரை எவ்வாறு மீண்டும் திரும்ப வரவழைப்பது என்றும் தீவிர சிந்தனையில் ஆழ்ந்த அக்பருக்கு, இறுதியாக ஒரு யோசனை தோன்றியது.

உடனே அவர் மந்திரியை அழைத்து "மந்திரியாரே! கொளுத்தும் நடுப்பகல் வெயிலில் குடையின்றி ஒருவன் பிரதான சாலையில் நடந்து வரவேண்டும். அப்படி வருபவனுக்கு நூறு பொற்காசுகள் தரப்படும் என்று ராஜ்யமெங்கும் தண்டோராப் போடுங்கள்!" என்றார்.

"பிரபு! இப்போது கடுங்கோடை காலம்! குடையில்லாமல் அரை மணிநேரம் நடந்தாலும் நடப்பவன் சுருண்டு விழுந்து விடுவான். அப்படிஇருக்க யார் தங்கள் உயிரை நூறு பொற்காசுக்காக விட முன்வருவார்கள்?" என்றார். "நான் சொல்வது போல் தண்டோராப் போட்டு அறிவியுங்கள்! போதும்!" என்றார் அக்பர். உடனே மந்திரியும் அக்பரின் விருப்பப்படி ராஜ்யமெங்கும் தண்டோராப் போட்டு அறிவித்தார்.

அக்பரின் அறிக்கையைக் கேட்ட பொது மக்கள் ஆச்சரியமுற்றனர். "சக்கரவர்த்திக்கு என்ன இப்படி ஒரு வினோதமான ஆசை? இந்த சவாலை யார்தான் ஏற்பார்கள்?" என்று தங்களுக்குள் கூடிக்கூடிப் பேசிக் கொண்டார்கள். தலைநகருக்கு அருகேயிருந்த ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வந்த ஒரு பரம ஏழை இந்த செய்தியைக் கேட்டு பரபரப்படைந்தான்.......

(தொடரும்)

03.2014
15

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- கிமு 44 - உரோமன் குடியரசின் மன்னன் ஜூலியஸ் சீசர் மார்க்கஸ் புருட்டாஸ் மற்றும் பல உரோமன் செனட்டர்களால் குத்திக் கொல்லப்பட்டான்.
- 933 - பத்தாண்டுகள் அமைதிக்குப் பின்னர் ஜேர்மனிய மன்னன் முதலாம் ஹென்றி ஹங்கேரிய இராணுவத்தை ரியாட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தான்.
- 1493 - கொலம்பஸ் அமெரிக்காவுக்கான தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்பெயின் திரும்பினார்.
- 1776 - தெற்கு கரோலினா பிரித்தானியாவிடமிருந்து விடுதலையை அறிவித்தது. பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்ற முதலாவது அமெரிக்கக் குடியேற்ற நாடு இதுவாகும்.
- 1802 - இலங்கையின் முதலாவது அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது.
- 1815 - நேப்பில்ஸ் மன்னன் ஜோக்கிம் முராட் ஆஸ்திரியா மீது போர் தொடுத்தான்.
- 1848 - ஹங்கேரியில் புரட்சி வெடித்தது. ஹாப்ஸ்பேர்க் ஆட்சியாளர்கள் சீர்திருத்தக் கட்சியின் முக்கிய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.
- 1877 - முதலாவது தேர்வுத் துடுப்பாட்டம் இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் மெல்பேர்ணில் ஆரம்பமானது.
- 1917 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் த்சார் மன்னன் முடி துறந்தான்.
- 1922 - எகிப்து ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து முறையாக விடுதலை அடைந்த பின்னர் முதலாம் ஃபுவாட் எகிப்தின் மன்னனானான்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியப் படைகள் உக்ரேனின் ஹார்க்கொவ் நகரை சோவியத் இராணுவத்திடம் இருந்து கைப்பற்றினர்.
- 1961 - தென்னாபிரிக்கா பொதுநலவாய நாடுகளில் இருந்து வெளியேறியது.
- 1970 - எக்ஸ்போ "70 உலகக் கண்காட்சி ஜப்பானின் ஒசாக்கா நகரில் ஆரம்பமானது.
- 1985 - முதலாவது இணைய டொமைன் பெயர் (sym bolics.com) பதியப்பட்டது.
- 1990 - பிரித்தானிய ஊடகவியலாளர் பர்சாட் பாசொஃப்ட் ஈராக்கில் தூக்கிலிடப்பட்டார்.
- 1990 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் ஒன்றியத்தின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவானார்.
- 1991 - இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜேர்மனியின் ஆதிக்க நாடுகளான ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகியவற்றிடம் இருந்து ஜேர்மனி முழுமையான விடுதலையைப் பெற்றது.
- 2004 - சூரியக் குடும்பத்தில் அதிவேகமான பொருள் 90377 செட்னா கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1767 - ஆன்ட்ரூ ஜாக்சன், ஐக்கிய அமெரிக்காவின் 7ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1845)
- 1830 - பவுல் ஹெயிஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (இ. 1914)
- 1854 - எமில் பேஹ்ரிங்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ. 1917)
- 1915 - அழகு சுப்பிரமணியம் ஆங்கில இலக்கியத் துறையில் புகழ் பெற்ற இலங்கையர் (இ. 1973)
- 1920 - டொன்னல் தோமஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1930 - அல்ஃவியோரவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர்

### இறப்புக்கள்

- கிமு 44 - ஜூலியஸ் சீசர், ரோமன் குடியரசின் மன்னன் (பி. கிமு 100)
- 1897 - ஜேம்ஸ் சில்வெஸ்டர், கணிதவியலாளர் (பி. 1814)
- 1962 - ஆர்தர் கொம்ப்டன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1892)
- 2004 - ஜோன் போப்பில், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி. 1925)

### சிறப்பு நாள்

உலக நுகர்வோர் தினம்

## ஜூலியஸ் சீசர்



ஜூலியஸ் சீசர் சாதாரண குடும்பத்தில் ஔரெலியாவின் மகனாக கி.மு. 100 ஆவது ஆண்டில் பிறந்தார். சுபுரா என்ற உரோம நகரப்பகுதியில் ஒரு சாதாரண வீட்டில் வளர்ந்தார். சீசரின் தந்தையை விட அவர் தாயின் கவனிப்பில் தான் வளர்ந்தார். சீசரின் கல்வி அவரின் ஏழாம் வயதில் இலத்தீன், கிரேக்க மொழிப் பாடங்களுடன் துவங்கியது. கிரேக்க, இலத்தீன் இலக்கணம், கணித இயல், எழுத்துத்திறன் முதலியவற்றை சீசரும், அவரின் தங்கைகளும் வீட்டிலேயே கற்று அறிந்தனர். பன்னிரண்டு வயதில் இலக்கியம், கவிதைகள் இவற்றையும் சீசர் கற்றிருந்தார். அவர் எகிப்திய நாட்டிலுள்ள அலெக்சாந்திரியா நகரத்தில் கிரேக்கம், இலத்தீன் மொழிகளை நன்கு கற்றுணர்ந்தார்.

இவர் ரோமானிய இராணுவ மற்றும் அரசியற் தலைவர். உலக வரலாற்றின் குறிப்பிடத்தக்க தலைவர்களுள் ஒருவராவார்.

ஆங்கில நாடக மேதை வில்லியம்ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற ஜூலியஸ சீசர் (கி.பி 1599) நாடகத்தின் கதாநாயகனாகவும், கிரிகோரியன் நாட்காட்டியை சீரமைத்து தற்கால பயன்பாட்டில் இருக்கும் நாட்காட்டியை உருவாக்கியவராகவும் சீசர் அறியப் பெறுகிறார்.

இவருடைய சிந்தனையில் உருவான அடிமைகள் விளையாட்டு அரங்கம் மிகவும் புகழ் பெற்றது. சீசர் கிரேக்க வரலாற்றில் பெரும் வீரராகவும், போரின் பொழுது கருணை காட்டாதவராகவும், இலக்கியவாதி, சீர்திருத்தவாதியாகவும் அறியப் பெறுகிறார்.

ஜூலியஸ் சீசர் எகிப்தினை போரின் மூலம் வெல்ல துணிந்தார். அப்பொழுது ஆதரவற்ற நிலையில் இருந்த கிளியோபாட்ரா சீசருடன் இணைந்து கொண்டார். கிளியோபாட்ராவை விரட்டிவிட்ட அவரது கணவன் தொலமியுடன் சீசர் போரிட்டார். இப்போரில் தொலமியை சீசர் கொன்றார். வரலாற்று ஆசிரியர்கள் சிலர் தொலமியை கொன்றது கிளியோபாட்ரா என்றும் கூறுகின்றனர்.

கிளியோபாட்ராவின் அழகில் மயங்கிய ஜூலியஸ் சீசர் அவரை காதலியாக ஏற்றுக்கொண்டார். எகிப்தினை வென்றவர் அதற்கு கிளியோபாட்ராவை தலைவியாக்கினார். இவர்களுக்கு சிசேரியன் என்ற மகனுண்டு.

ஜூலியஸ் சீசர் அறிவிக்கப்படாத சர்வாதிகாரி போல ரோமில் செயற்பட்டார். கிரிகோரியன் காலெண்டர் மாற்றத்திற்கு உள்ளானது. கிரேக்கமெங்கும் சீசரின் பெரும் சிலைகள் எழுப்பப்பெற்றன. நாணயங்களில் சீசரின் உருவம் பொறிக்கப்பட்டது. இதனால் வருத்தமுற்ற சீசரின் உடனிருந்த பலர் சீசரை கொல்ல திட்டமிட்டனர். கி.மு. 44 பங்குனி 15 இல் மார்கஸ் ப்ரூடஸ. சர்விலஸ் காஸ்கா, காசியஸ் லான்ஜினஸ் என பலர் இணைந்து சீசரை கததியால் குத்திக் கொன்றனர். பாம்பேயின் சிலை கீழே சீசர் விழும்பொழுது அவருடைய உடலில் முப்பத்தைந்து கத்திக் குத்துக் காயங்கள் இருந்தன. அப்பொழுது சீசரின் வளர்ப்பு மகனான அக்டேவியஸ் பதினெட்டு வயதுடையவராக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...சிவபெருமானும் அவனுடைய உறுதியையும், பக்தியையும் மெச்சி, மேன்மை தங்கிய அருட் பேரொளியாயிருந்த தமது திருவடித் தாமரையில் ஆட்கொண்டார்.

பின்னாளில் பச்சைமாலின் தாய் தந்தையர்களுக்கும், தனது அபிஷேகத்திற்குப் பால் தந்த அந்தப் பசுவுக்கும் கூட மேலான மோட்சத்தை அளித்தார் சிவபெருமான்.

தம் கண்ணெதிரில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரானந்தரையும், சட்டை முனிவரையும் நோக்கி, சித்தர்களே! உங்களுக்கு வேண்டும் வரத்தையும் கேளுங்கள் என்றார்.

சுந்தரானந்தரும், சித்தர் வடிவம் தாங்கி இங்கு வந்து எங்களுடன் சித்தரோடு சித்தராக சிநேகம் கொண்டிருந்த எம்பெருமானே! உங்கள் தரிசனம் எங்களுக்கு மிக மகிழ்ச்சியளிக்கிறது. இன்று இங்கு கண்ட இந்தத் தரிசனத்தை எந்நாளும் நாங்கள் காணும் வகையிலும் தங்கள் திருமேனியை எந்நாளும் பூசிக்கும் படியுமான வரத்தைத் தந்தருள வேண்டும் என்று கேட்டார்.

சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி மறைந்தார். அதுவரை அவர் நின்றிருந்த இடத்தில் தலை சாய்த்த நிலையில் கூம்பு வடிவ சிவலிங்கமாகத் தோன்றினார்.

அப்போது தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தேவதுந்துபிகள் முழங்கின. சித்தர்கள் அந்தச் சிவலிங்கத்தைப் போற்றி வணங்கினர்.

பசுவிடம் பாலருந்தும் போது பச்சைமாலால் அடிபட்டதால் வலப்பக்கம் சாய்ந்த நிலையிலேயே சுயம்பு வடிவமான மகாலிங்கம் நமக்குக் காட்சி தருகிறாராம். இன்றும் இந்தச் சிவலிங்க மூர்த்தத்தின் மீது பச்சைமாலால் அடிபட்ட



வடுவைக்கூட காண முடியுமாம்.

இந்த மகாலிங்கம் தோன்றிய இடத்திற்கு அருகிலிருந்த குகையில் தவம் செய்து வந்த சுந்தரானந்தரே சுந்தர மூர்த்தி லிங்கத்துக்கும் இந்த மகாலிங்கத்திற்கும் முறைப்படி பூசை செய்து வந்தமையால் இந்த லிங்கம் சுந்தரமகாலிங்கம் என்று அழைக்கப்பட்டு அவர் கோயில் கொண்ட மலையும் மகாலிங்க மலை என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

ஆரம்ப காலம் முதல் சுந்தரானந்தர் முதலான சித்தர்கள் மட்டுமே இந்த லிங்கத்தைப் பூஜை செய்தமையால் சாதாரண பக்தர்கள் யாரும் இந்த மலைக்கு வந்ததில்லை.

பின்னர் ஒரு காலகட்டத்தில் இறைவனின் விருப்பப்படி சாதாரண மனிதர்களும் இந்த மகாலிங்கத்தைப் பூஜை செய்யும் படியான நிலை உருவானதாம். இப்படி மகாலிங்கத்தை மானிடர் பூஜை செய்யும் முறையை உண்டாக்கியவர் காஞ்சிபுரம் ஸ்ரீ சங்கர மடத்தின் பக்தராக இருந்த கணபதி சுவாமிகள்தான் என்ற புதிய தகவலைத் தெரிவித்தார் அருகிலிருந்த பக்தர் ஒருவர்.

ஓ! அப்படியா! என்றோம் சாதாரணமாக.

என்ன ஓ! அப்படியா! காஞ்சிபுரத்தில் வசித்து வந்த கணபதி சுவாமிகளை சுந்தர மகாலிங்கமே நேரில் சென்று தனக்குப் பூஜை செய்வதற்காக சதுரகிரிக்குக் கூட்டி வந்தாரென்றால் அது சாதாரண விடயமா? எப்பேர்ப்பட்ட ஆச்சரியம்! சாதாரண ஓ போட்டுவிட்டீர்களே! என்றார் ஆதங்கத்துடன்.

அவரின் உண்மையான ஆதங்கம் எங்களுக்கும் புரிந்தது. அதில்லை பெரியவரே, சுந்தர மகாலிங்கம் கணபதி சுவாமிகளை இந்தச் சதுரகிரிக்குக் கூப்பிட்டு வந்த கதை தெரியாததால்தான் அதனைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டோம். நீங்கள் சொல்வதைப்

## ஆன்மீகம் 62

பார்த்தால் அதற்கும் ஏதேனும் வரலாறு இருக்கும் போலிருக்கிறதே. உங்களுக்கு அதைப் பற்றித் தெரிந்தால் எங்களுக்கும் சொல்லுங்களேன்.

இரவு தங்கிவிட்டு காலையில் செல்கிறீர்களா? இல்லை இப்போது தரிசனம் முடிந்ததும் உடனே கீழே இறங்க ஆரம்பித்து விடுவீர்களா?

இல்லை, இங்கு இரண்டு இரவுகள் தங்கி சுற்றிப் பார்க்கத் திட்டமிட்டுள்ளோம். ஒருநாள் மகாலிங்க தரிசனம், மறுநாள் வன தரிசனம் என்றோம்.

நல்லது, பூஜை முடியட்டும், உங்களுக்கு அந்த வரலாற்றைச் சொல்கிறேன் என்றார் அந்தப் பெரியவர்.

எங்களின் இந்த உரையாடலை திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார் அருகிலிருந்த தியாகராசன்.

ஓம் நமசிவாய! ஆலயத்தின் செகண்டி முழங்குகிறது. அரோகரா, சுந்தர மகாலிங்கருக்கு அரோகரா. பக்தர்கள் பரவசமாகின்றனர். கருவறையில் பூஜை செய்யும் பூசாரி சங்கு ஊதுகிறார். அந்தச் சங்க நாதத்தினூடே கற்பூர ஆரத்தியும் நடைபெறுகிறது. கற்பூர ஒளியில் மகாதேவர் சுந்தர வடிவினராகக் காட்சி தருகிறார். ஆனந்த தரிசனம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

74

...ஏர்- இந்தியா போயிங் விமானத்தில் பாதி பகுதியில் ஒரு மினி ஆஸ்பத்திரியை அமைத்தார்கள் ஏர்-இந்தியா நிறுவனப் பொறியியல் விற்பன்னர்கள். அந்த விமானத்தில் முடக்கப்பட்டிருந்த இருக்கைகளை அகற்றிவிட்டு செம்மல் படுக்க கட்டில், அவரைச் சுற்றி மருத்துவக் கருவிகளை இணைக்க மேஜைகள்- இப்படி அனைத்தையும் பிரத்யேகமாக தயார்செய்து விமானத்தில் வைத்தனர். இதுவரை நடமாடும் மருத்துவமனையும், மிதக்கும் மருத்துவ மனையும்தான் இருந்தன. செம்மலுக்காக பறக்கும் மருத்துவமனையே நிர்மாணிக்கப்பட்டது.

இருபத்திரண்டு மணி நேரம் பயணம். அமெரிக்கா போகும் விமானம் லண்டனில் இறங்கி பெற்றோல் நிரப்பிக்கொண்டு பயணத்தைத் தொடர வேண்டும். அங்கு இறங்கி ஏறும்போது சிறு அதிர்ச்சியும் ஏற்படக் கூடாது. அதற்கு வேண்டிய முறையில் விமானத்தை இயக்குவதாக அந்த ஏர்- இந்தியா பைலட் சொன்னார். செம்மலுடன் பதினேழு மருத்துவர்களும் உடன் அம்மா, உதவியாளர் மாணிக்கம், விஷேச மருத்துவராகவும் அமைச்சர் என்ற முறையிலும் டாக்டர் ஹண்டே ஆகியோர் சென்றார்கள்.

அப்பல்லோவிலிருந்து விமான நிலையம் வரை செல்லும் வாகனத்திலும் ஒருசிறு மருத்துவ நிலையம் அமைக்கப்பட்டது.

ஒரு கண்ணாடி குவளையில் நீரெடுத்து வைத்தால், அந்த நீருக்கு அசைவிருக்காது. அதுதான் போயிங் விமா



ஜப்பானிஸ் டாக்டருடன் எம்.ஜி.ஆர்.

னத்தின் ஓட்டம். பதினேழு மருத்துவர்களும் மருத்துவக் கருவிகளின் இயக்கத்தை உன்னிப்பாகப் பார்த்து வந்தனர். அம்மாவின் கவனமெல்லாம் உடம்பில் அசைவு வருகிறதா என்றுதான்.

லண்டனில் விமானம் இறங்கியதே தெரியாமல் இறங்கியது. பஞ்சு மெத்தையில் குழந்தையைப் போடுவது போல் பைலட் இறக்கினார். இது பெரும் சாதனை. இரண்டாயிரம் டன் எடையுள்ள வாகனம் முன்னூறு மைல் வேகத்தில். ஃபெதர்டச் என்று சொல்லுவது போல் பூமியில் இறங்குவது சாதாரண விஷயமல்ல, பெரிய சாதனை. லண்டன் விமான நிலையத்தில்



கொஞ்ச நேரம் சிரம பரிகாரம் செய்து கொள்ள பைலட்கள் சென்றனர். ஆனால் எந்த மருத்துவரும் அதற்கு இசையவில்லை. அம்மா அசையவே இல்லை. பயண உதவிப் பெண்கள் கெஞ்சி, கொஞ்சம் காபி கொடுத்தனர். எப்படி விமானம் த்ரையை தொட்டதோ அப்படி மேலே கிளம்பியது. ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும் என்பார்கள். அன்று இரும்பும் பஞ்சாகிப் பறந்தது. இனி மிஞ்சிய தூரத்துக்கும் கொஞ்சமும் பயமில்லையென்றார் டாக்டர் ஹண்டே.

### ஈஸ்வர் அல்லா

மகாத்மா காந்தியடிகள் முணுமுணுக்கும் பாடலின் பல்லவி ஈஸ்வர் அல்லா... எப்பெயர் சொல்லி அழைப்பதும் ஒருவனையே என்பது. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்... ஏன் பௌத்தரும்கூட பாய் பாய் என்று நினைக்க வைத்தது செம்மலின் நினைவாற்றலின்மை. செம்மலுக்கு நினைவு திரும்பி வரவேண்டும்: அவரது நிழல் பலகாலம் நீடித்து இருக்க வேண்டுமென்று எல்லா மதத்தின ரும் பிரார்த்தனை புரிந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்தமைக்காக யுத்தக்குற்றச்சாட்டுகள் எம்மீது சுமத்தப்பட்டுள்ளன

**(காலி)**

**அரசாங்கம் என்ற வகையில் நாம் மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுகையில் சர்வதேச நாடுகள் எம்மை மறைமுகமாக காலைவாரப் பார்க்கின்றன எனவும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து இதற்கு எதிராக செயற்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

காலி நகரில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முப்பது வருடகாலம் நாட்டைச் சீரழித்த பங்கரவாதத்தை அழித்தொழித்தமைக்காக எம்மை யுத்தக் குற்றஞ்சாட்டி சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கையில் மேற்கத்தேய நாடுகள் ஈடுபட்டுள்ளன.

இத்தகைய சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பலப்படுத்தும் வகையில் எமது ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் உலகிற்கு எடுத்துக்காட்ட இத் தேர்தல் மூலம் மக்கள் அமோக ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இப்போது சகவாழ்வு, ஜனநாயகம் என்று குரலெழுப்பும் எதிர்க்கட்சி அப்போது நாம் ஜனநாயக ரீதியில் எடுத்த முயற்சிகளையும் சீர்குலைத்தது.

அரசாங்கம் தென் மாகாணத்தில் மட்டுமன்றி அனைத்துப் பிரதேசங்களிலும் பாரிய அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகிறது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றியுள்ள அரசாங்கம் என்ற வகையில் நாம் மக்களுக்குக் கடனாளிகளல்ல. அந்தளவு மக்கள் சேவையை பெருமளவில் மேற்கொண்டுள்ளோம்.

நாம் அரசாங்கம் என்ற ரீதியில் மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றி வருகையில் மேற்கததேய நாடுகள் எமது காலை வாரிவிடப்பார்க்கின்றன. பயங்கரவாதத்தை ஒழித்தமைக்காக யுத்தக் குற்றச்சாட்டுக்கள் எம்மீது சுமத்தப்பட்டுள்ளன.

நாட்டு மக்கள் அனைவரும் இதற்கெதிராகக் குரலெழுப்பும் காலமிது. எமது ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் இத் தேர்தல் மூலம் வெளிக்காட்டுவது மக்களின் பொறுப்பு எனறார். (2)

நிமால் சிறிபால டி சில்வா





*வடமாகாண கல்வி திணைக்களமும் யாழ்.கல்வி வலயமும் இணைந்து தேசிய மட்டத்திற்க்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றினை யாழ் கல்வி வலயத்தில் நடைபெற்றது. இச் செயலமர்வை வளவாளர் வொலன்ரைன் நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட மாணவர் களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)*

# பிரித்தானியாவின் பார்வையில் தொடர்ந்தும் இலங்கை

இலங்கையின் நிலவரம் தொடர்பில் பிரித்தானியா தொடர்ந்தும் இலங்கை அதிகாரிகளுடனும் வேறு நாட்டு அரசாங்கங்களுடனும் பேச்சு நடத்துவதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கத்துடன் பல்வேறு சந்திப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மற்றும் இலங்கையின் வெளியுறவு அமைசசர் பீரிஸ் உள்ளிட்டோர் அடங்குகின்றனர்.

இதேவேளை, பொதுநலவாய உயர்ஸ்தானிகர்களின் அமர்வுக்காக பிரித்தானியாவுக்கான இலங்கையின் உயரஸ்தானிகருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியன்று லங்ஸ்டார் இல்லத்தில் கலந்துரையாடல்கள் நடத்தப்படடன.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய வெளியுறவு அலுவலக அமைச்சர் ஹுகோ ஸ்வைரி, ஐக்கிய நாடுகள் மனதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின், இலங்கையில் இரண்டு தரப்பும் மேற்கொண்ட போரக்குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணையை பிரித்தானியாவும் ஏற்றுக்கொளவதாக குறிப்பிட்டார்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கையில் உள்நாட்டு விசாரணைகள நடத்தப்படவில்லை.

இந் நிலையில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்டுள்ள யோசனையை நிறைவேற்றுவதில் பிரித்தானியா தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருவதாக ஸ்வைரி தெரிவித்தார். (2)

# இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டால் மட்டும் பேச்சு

## தமிழக முதல்வர் திட்டவட்டம்



(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளீ சகல இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை முனைப்புக்களை தொடரமுடியும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.எனினும், இறுதி நேரத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப் பட்டிருந்தன.

மொத்தமாக 177 மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது 44 படகுகளும் கைப்பற்றப் பட்டுள்ளதாக ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதில் 116 இந்திய மீனவர்களையும், 26 படகுகளையும் இலங்கை அரசாங்கம் விடுதலை செய்துள்ளது.

இம்மாதம் 25 ஆம் திகதி பேச்சுவார்த்தைகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மீன்பிடி வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை-இந்திய மீனவர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப் படுவதற்கு முன்னதாக இரு நாடுகளினாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.


நல்லெண்ண அடிப்படையில் இரு நாடுகளினதும் மீனவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் அத்துடன் மீனவர்கள் மட்டுமன்றி கைப்பற்றப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளும் விடுவிக்கப்படவுள்ளன.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பு, நலன்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்திய மீன்பிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

# ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாடு இலங்கையில்

## -செப்டெம்பர் 18 இல் ஆரம்பம்-



(கொழும்பு)

ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டின் (ICAPP) அடுத்த கூட்டம் எதிர் வரும் செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறும்.

இக்கூட்டத்தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி நடைபெறும். ஐகெப் நிலையியற் குழுவின் செயலாளர் நாயகம் சுங் யு - யொங் நேற்றுமுன்தினம் பகல் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது மேற்படி மாநாட்டின் நிகழ்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டன.

மாநாட்டின் தொனிப்பொருளை குறிப்பிடும்படி இலங்கையை கேட்டுக்கொண்டதற்கிணங்க **ஆசிய சமூகம் ஒன்றை கட்டியெழுப்புதல்** என்ற தொனிப்பொருளில் மாநாட்டை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

ஐகெபிற்கு அடுத்த கூட்டத்தை இலங்கையில் நடத்தும்படி கடந்த ஆண்டு ஜூலை மாதம் அழைப்பு விடுக்கப்பட்டது.

மாநாட்டின் கூட்டத்தொடர் இலங்கையில் நடைபெறுவதை பார்வையிடுவதற்கு ஐகெப் அங்கத்தவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டுவதாக யு-யொங், ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

ஆசியாவின் சுமார் 100 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அமர்வில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை இத்தகைய கூட்டம் ஒன்றிற்கு மிகப் பொருத்தமான ஒரு இடத்தில் அமைந்துள்ள ஒரு நாடு என அவர் கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ராஜபக்ஷ, கடந்த ஆண்டு மே மாதம் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது ஷென்சீ பிராந்தியத்தில் நடைபெற்ற ஐகெப் விசேட மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.

ஆசிய நாடுகளுக்கிடையில் நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி ஜனாதிபதி அதன்போது வலியுறுத்தினார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறைக்காவலர் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலைக் குள் போதைப் பொருள் கொண்டு செல்ல முயன்ற இரு சந்தேக நபர் களும் அவர்களுக்கு உதவி செய்த சிறைக்காவலர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹ்ரான பொலிஸ் பிரிவில் கங்கொடவில நீதிமன்ற வளாகத் தில் வைத்து மிரிஹான விசேட குற் றத் தடுப்பு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து ஹசீழ் என்ற போதைப் பொருள் 8 கிராம் 930 மில்லி கிராம் மீட்கப்பட் டுள்ளது.

சந்தேக நபர்கள் கங்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய் யப்படவுள்ளனர். (2)

## விண்ணப்பம் கோரல்

ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்காக உதவி ஆசி ரியர்களைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன


நேற்றைய தினம் வெளியாகிய வர்த்தமானியில் இதனைப் பார்வை யிட முடியும்.

இதற்கு மூன்று மாத அரச சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர் வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி யாகும். தற்போது வர்த்தமானி அறி வித்தல் திருத்தம் செய்யப்பட்டு வெளிவந்திருப்பதன் மூலம் வட மாகாணத்தில் உள்ள 700 இற்கும் மேற்பட்டவர்கள் நன்மையடைய வுள்ளனர். (2)

# அமெரிக்காவின் பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் அரசாங்கம் அதனை ஏற்காது நிராகரிக்கும்

## தினேஷ்குணவர்தன தெரிவிப்பு



(கொழும்பு)

ரஷ்யா, சீனா, கியூபா, பாகிஸ் தான் போன்ற நாடுகள் அமெரிக் காவின் பிரேரணையிலுள்ள விட யங்களை நிராகரித்துள்ள நிலை யில் ஜெனீவா பிரேரணை பலவீன மடைந்து வருகிறது.

இது இலங்கைக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.ம.சு.மு. ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன் தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

ஜெனீவா மாநாடு குறித்து எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைக்கு எதிரான பிரே ரணை உண்மைக்கு புறம்பான விடயங்களினடிப்படையில் தயாரிக் கப்பட்டுள்ளதால் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் அரசாங் கம் அதனை ஏற்காது நிராகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க பிரேரணையிலுள்ள விடயங்களுக்கு எதிராக பல நாடு கள் ஜெனீவாவில் உரையாற்றியுள் ளன.

அதனை நிராகரித்து அவை கருத்து வெளியிட்டுள்ளன. புலம் பெயர் அமைப்புக்களினதும் கருத் துக்கள் மேலைத்தேய நாடுகளின தும் கருத்துக்கள் தோற்கடிக்கப் பட்டுள்ளன.

ஜெனீவாவில் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் ஆற்றிய உரையைத் தொடர்ந்து பல நாடு கள் இலங்கைக்கு சாதகமாக உரை யாற்றியுள்ளன.

அமெரிக்கா அடங்கலான மேலைத் தேய நாடுகளின் தேவைப்படி ஏனைய நாடுகளைத் தவறாக வழி நடத்த முடியாது என்பது இதன் மூலம் புலனாகிறது.

அமெரிக்க பிரேரணையிலுள்ள விடயங்கள் ஒவ்வொன்றாக நிராக ரிக்கப்பட்டுள்ளன. இலங்கையல் லாத நாடுகள் இவ்வாறு பிரேரணையை நிராகரித்திருப்பது இலங்கைக்கு சாதகமாக உள்ளது.

இது இலங்கைக்கு கிடைத்த வெற்றியாகும். இது மற்றைய நாடு களின் உள் விவகாரங்களில் ஏனைய நாடுகள் தலையீடு செய் வதை தடுக்க வழிவகுக்கும்.

இலங்கைக்கும் இந்தியாவுக் குமிடையில் நெருங்கிய உறவு காணப்படுகிறது. அங்கு தேர்தல் நடைபெறும் நிலையில் அதனடிப் படையிலே இலங்கையின் முடிவும் இருக்கும். இந்திய பிரதமரை அண்மையில் ஜனாதிபதி சந்தித் தார்.

சில சில விடயங்கள் தொடர்பில் இரு தரப்பிற்குமிடையில் தொடர்ந்து பேச்சு நடக்கிறது.

இலத்தீன் அமெரிக்க நாடுகள் இலங்கை தொடர்பில் சாதகமான பேச்சையே கொண்டுள்ளன. ஏனைய நாடுகளுக்கு இலங்கை யின் உண்மை நிலை குறித்தும் தெளிவுபடுத்தி வருகிறோம்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் வேகமாக செயற்ப டுத்தப்படுகிறது.

இங்கு வந்து உண்மை நிலையை அறியாமலே இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுகள் அடுக்கப்படுகின் றன. எவருக்கும் இங்கு வந்து உண்மை நிலையை நேரில் பார்க்க முடியும்.

அமெரிக்க பிரேரணையை நாம் முற்றாக நிராகரிக்கிறோம். நவநீதம் பிள்ளையின் அறிக்கை யையும் நிராகரிக்கிறோம். ஒவ்வொ ருவர் சொல்லும் குற்றச்சாட்டின் அடிப்படையில் எந்த நாடு குறித்தும் விசாரிக்க முடியாது.

இலங்கை யுத்தத்தின் பின் பாரிய முன்னேற்றம் கண்டு வருகி றது. கடந்த முறை ஜெனீவாவில் வடபகுதி தேர்தலை நடத்துவதாக உறுதியளித்தோம்.


அதன்படி வடமாகாண தேர் தலை நடத்தி முடித்துள்ளோம். இதனை பாராட்ட வேண்டும்.

இலங்கைக்கு வந்திராத நாடுக ளின் கூற்றுப்படியே ஜெனீவா பிரே ரணை தயாரிக்கப்பட்டுள்ளது. டயஸ் போராக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுமே இதற்கு தகவல் வழங்கியுள்ளன. இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பில் அமெரிக்க செனட் சபையிலும் மாறுபட்ட கருத்தே காணப்படுகிறது.

இலங்கைக்கு எதிரான பிரே ரணையில் உள்ள விடயங்கள் உண்மைக்கு புறம்பானவை. அத னால் இந்தப் பிரேரணை நிறை வேற்றப்பட்டாலும் அதனை ஏற்க முடியாது.

அரசியலமைப்பின் பிரகாரம் மக்கள் தந்துள்ள ஆணைப் படி மக்களுக்கு தேவையானவற்றை அரசாங்கம் முன்னெடுக்கும். மனித உரிமை மீறலுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் செல்லும் உரிமை எமது நாட்டிலே உள்ளது. மேலைத் தேய நாடுகளில் கூட இந்த உரிமை வழங்கப்படவில்லை என்றார்.

சர்வதேச ரீதியில் இலங்கை முகம் கொடுக்கும் சவால்களை தோற் கடித்து வென்ற சுதந்திரத்தை பாது காப்பதற்கு இந்த தேர்தல் மூலம் சர்வதேச சமூகத்துக்கு சரியான பதில் வழங்க முடியும் என்றார். (2)



யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனான லக்ஸ்மன் டேவிற் இராணுவத்தில் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றமைக்கு பாராட்டுத் தெரிவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட வைபவம் நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு வருகை தந்த லக்ஸ்மன் டேவிற் மற்றும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா ஆகியோருக்கு பாண்ட் வாத்திய இசையுடன் செங்கம்பள வரவேற்பளிக்கப்படுவதையும் பாடசாலை சமூகத்தினரால் நினைவுச் சின்னம் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன், மானிப்பாய் செய்தியாளர்)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் தர்மாசிரியர் பரீட்சையில் சித்தி அவசியம்

## சாந்தி நாவுக்கரசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அறநெறிப் பாடசாலை ஆசிரி யர்கள் அனைவரும் தர்மாசிரியர் பரீட்சையில் சித்திபெறவேண்டும் என திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள் ளார்.

இந்து சமய அறநெறிப்பாடசா லைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் அறநெறிப்பாட சாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்க ளுக்குரிய இறுதி நிலை மற்றும் தர்மாசிரியர் பரீட்சைகளில் சித்தி பெறவேண்டியது மிகவும் அவசியமாகும் என பணிப்பாளர் தெரிவித்துள் ளார்.

கொழும்பு இராமகிருஷ்ண மண் டபத்தில் இரத்தினபுரி, பதுளை, மாத் தளை, நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தர்மாசி ரியர் பரீட்சைகளில் தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளுக்கென ஆரம் பித்துவைக்கப்பட்ட இரண்டு நாட் கள் வதிவிடக்கருத்தரங்கில் தலைமை யேற்று உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

தர்மாசிரியர் பரீட்சை ஐங்கு பாட நெறிகளைக் கொண்ட பாடத்திட் டத்திற்கு அமைவாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் இப் பரீட்சைக்கென முன்னோடிக் கருத்தரங்குகளை இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களம் மாவட்டங்கள் தோறும் நடத்திவரு கின்றது.

அறநெறிப் பாடசாலைகள் இன்று எமது சமூகத்திற்கு அத்தியாவசிய தேவையாகவுள்ளது.

இந்த அமைப்பின் [illegible] நாம் சிறுவர்கள் மத்தியில் நற்பண் புகளை போதிக்கமுடியும் இன்றைய சமூக அமைப்பில் நமது சமய தத்து வங்களை மற்றும் ஒழுக்க விழுமி யங்களை அவர்கள் மனதில் ஆழ மாகப் பதிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

நற்பண்புகளோடு வாழும் சிறு வர்களே நாளை சிறந்த சமூகத் தலைவர்களாக மிளிருவார்கள்.

தர்மாசிரியர் பரீட்சை என்பது அறநெறிப் பாடசாலை ஆசிரியர்க ளுக்குரிய மிக உயர்ந்த தரத்திலான பரீட்சையாகும்.

ஐந்து பாடங்களிலும் சித்தி பெறும் விண்ணப்பதாரிகளுக்கு தர்மா சிரி யர் என்ற விருதுடன் கூடிய சான்றி தழைஇலங்கைப் பரீட்சைத் திணைக் களம் வழங்குகின்றது என்றார். (2)

## கட்டடத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியிலிருந்து யாழ்.மாவட்டச் சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தி னால் கொள்வனவு செய்யப்பட்ட காரி யாலயக் கட்டடத் திறப்பு விழா எதிர் வரும் 20 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு இல 276, அரசடி வீதி கந்தர் மடத்தில் இடம்பெறும்.

இக்கட்டடத்தை யாழ்.மாவட்ட அர சாங்க அதிபர் சுந்தரம் அருமைநாய கம் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர் களாக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய தலைவர் திருமதி சறோஜா சிவச் சந்திரன், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், நல்லூர் பிரதேசச் செயலர் பா.செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

கௌரவ விருந்தினர் உரை யினை வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்த குமார் ஆற்றுவார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிற்கு சவால்விடும் ரஷ்யா!



இரண்டாம் உலகப் போரில் நாஜிகளுடன் கூட்டுச் சேர்ந்து எழுபதாயிரம் பொலிஸ் மக்களையும், யூதர்களையும் இனப்படுகொலை செய்த, உக்ரைனிய இனவாத தலைவர் ஸ்டெபன் பணடேராவின் உருவப்படம் கீவ் நகரசபை மண்டபத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.

லெனின் சிலை, சோவியத் காலச் சின்னங்களை உடைத்து எறியப்பட்டு அவை இருந்த இடத்தில் நாஜி, பாசிச சின்னங்கள் வரையப்பட்டுள்ளன.

டெட்யானா சோர்னோவோல் என்ற வலது சாரி உக்ரைனிய இனவாத கூட்டமைப்பைச் சேர்ந்த பத்திரிகையாளர் அரசின் ஊழல் ஒழிப்பு துறையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசை தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் மே மாதம் நடைபெறும் என்று அறிவித்திருக்கும், தேர்ந்தெடுக்கப்படாத இடைக்கால அரசு அடுத்தடுத்து நாட்டின் எதிர்காலத்தை கட்டுப்படுத்தும் முக்கிய முடிவுகளை எடுத்து செயற்படுத்தி வருகிறது.

ஐ.எம்.எஃப்பிடம் $35 பில்லியன் கடன் கோரியிருக்கிறது. அமெரிக்க அரசிடமிருந்து $1 பில்லியன் உதவித் தொகையை பெறவிருக்கிறது. மேற்கத்திய நாடுகளின் இலக்குகளில் ஒன்றான உக்ரைனை ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்ப்பதற்கான இணைப்பு ஒப்பந்தத்தை மார்ச் 17 அல்லது மார்ச் 21 ஆம் திகதி கையெழுத்திடப் போவதாக அறிவித்துள்ளது.

மேலும், 2012 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சிறுபான்மை இனத்தவருக்கும், மொழியினருக்கும் பாதுகாப்பு அளிக்கும் சட்டத்தை இரத்து செய்வதாக அறிவித்திருக்கிறது. அதன்படி இனி மேல் உக்ரைனிய மொழி மட்டுமே நாட்டின் ஆட்சி மொழியாக இருக்கும்.

தேசிய சிறுபான்மையினரின் உரிமைகளை பறிக்கும், நாட்டை மேற்கத்திய நாடுகளின பிடியில் ஒப்படைக்கும் இந்த நடவடிக்கைகளை நாட்டின் தெற்கு, தென்கிழக்கு பகுதிகளில் ரஷ்ய மொழி பேசும் மக்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

தென் கிழக்கில் உள்ள 15 இலட்சம் ரஷ்ய மொழி பேசும் மக்கள் வாழும் கிரீமியா 1954 ஆம் ஆண்டு அப்போது சோவியத் குடியரசாக இருந்த உக்ரைனுடன் சேர்க்கப்பட்டிருந்தது.

1990-களில் சோவியத் யூனியன் வீழ்ந்து ரஷ்யாவும், உக்ரைனும் தனி நாடுகள் ஆன பிறகு 1997 இல் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி கிரீமியாவில் அப்போது இருந்த கருங்கடல் பகுதி கப்பற்படையில், 82 சதவீதம் ரஷ்யாவிடம் ஒப்படைக்கப்பட்டு, செவஸ்தபோல் துறைமுகம் ரஷ்யாவின் பயன்பாட்டில் விடப்பட்டது. அதற்காக பதிலாக உக்ரைனுக்கு நிதி உதவி, கடன் தள்ளுபடி வழங்கியதோடு ஆண்டுதோறும் பயன்பாட்டு கட்டணமும் ரஷ்யா கட்டி வருகிறது.

சுய ஆட்சிப் பிரதேசமான கிரீமியா, உக்ரைனின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியை தூக்கி எறிந்துவிட்டு அரசியல் சட்டத்துக்கு புறம்பாக உருவாக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. உக்ரைனிலிருந்து பிரிந்து ரஷ்யாவில் இணைவதற்கான கருத்துகணிப்பை மார்ச் 30 ஆம் திகதி நடத் தப் போவதாக அறிவித்தது.

கிரீமியா மக்கள் படையினர் தெருக்களில் இறங்கி பலத்தை காட்டினர்.

ரஷ்யா தனது வல்லரசு நலன்களையும் கிரீமியாவில் வாழும் ரஷ்ய மக்களையும் பாதுகாக்க கிரீமியாவுக்குள் இராணுவத்தை அனுப்ப முடிவு செய்தது.


ரஷ்யாவின் இந்த நடவடிக்கையை எதிர்த்து அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் குரல் கொடுத்தன. கிரீமியா பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பு நடத்துவது உக்ரைனிய அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று அமெரிக்க ஜனாதிபதி விளக்கம் அளித்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக கலகம் செய்வது, நாஜி இனவாத கட்சிகள் அதிகாரத்தைப் பிடிப்பது எல்லாம் ஜனநாயகமாகக் கருதும் ஒபாமா, பிரிந்து போகும் உரிமையின் அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்துவதை ஜனநாயக விரோதமாக கருதுகிறார்.

ரஷ்ய ஜனாதிபதி புடினின் சமாதானமான பேச்சுக்களை ஒதுக்கித் தள்ளிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மார்ச் 6 ஆம திகதி ரஷ்யாவுக்கு எதிராக முதல் சுற்று பொருளாதார தடைகளை விதித்தார். அதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் தனது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.

அமெரிக்க ஆயுதங்கள் பால்டிக் பகுதிக்கு அனுப்பப்பட்டு, போர்க் கப்பல்கள் கருங்கடல் பகுதியினுள் நுழைந்திருக்கின்றன.


ஜூன் 3 ஆம் திகதி நடைபெறவிருந்த ஐரோப்பிய ஒன்றியம்-ரஷ்யா உச்சி மாநாட்டுக்கான தயாரிப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.



ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதார தடைகள் விதித்தால் மேற்கத்திய கார்ப்பரேட்டுகள் தான் பாதிக்கப்படும் என்று ரஷ்யா பதிலடி கொடுத்திருக்கிறது.

உலகின் மிக வளமான விவசாய பகுதிகளில் ஒன்றான உக்ரைன் ரஷ்யாவை ஒட்டிய ஸ்லேவிய நாடுகளில் ஒன்று. அதன் நிலப்பரப்பு தமிழ்நாட்டைப் போல சுமார் ஐந்து மடங்கு பெரியது.

தமிழ்நாட்டு மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மட்டுமே உடையது (சுமார் 4 கோடி) . ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது அளவில் பிரான்ஸ் நாட்டைவிட பெரியதாகவும், ஜேர்மனியின் மக்கள் தொகையில் பாதியையும் கொண்டிருக்கிறது.



7 சதவீதம் முதல் 14 சதவீதம் புராதன உயிர்ச்சத்து அடங்கியிருக்கும் செர்னோஜெம் என்ற கருநிற மண் வகையின் உலகளாவிய அளவில் மூன்றில் ஒரு பகுதி உக்ரைனில் உள்ளது. இந்த வகை மண் பெருமளவு ஊட்டச் சத்துக்கள் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், உயர் நீர் தேக்கு திறனும் கொண்டது.

சோவியத் சோசலிச குடியரசுகளின் தானியம், இறைச்சி, பால், காய்கறிகள் உற்பத்தியில் 25% பங்களித்து வந்த உக்ரைன் சோவியத் யூனியனின் உணவுக் களஞ்சியம் என்று அழைக்கப்பட்டது.

ரஷ்யாவில் நடந்த 1917 ஒக்டோபர் புரட்சிக்குப் பிறகு உக்ரைன் சோசலிச குடியரசாக உருவாகி 1920-களில் உக்ரைனில் தேசிய மறுமலர்ச்சி ஏற்பட்டது.

அனைவருக்கும் அடிப்படை சுகாதாரம், கல்வி, சமூக பாதுகாப்பு மற்றும் வேலை செய்யும் உரிமை, குடியிருக்கும் வீடு பெறுவதற்கான உரிமை வழங்கப்பட்டன.

நூற்றாண்டுகள் பழமையான ஏற்றத் தாழ்வுகள் ஒழித்துக்கட்டப்பட்டு பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டது.

1930-களில் தொழில்துறை உற்பத்தி 4 மடங்காக அதிகரித்தது. விவசாய கூட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன.

இரண்டாம் உலகப் போரின் போது போலந்துடன் இருந்த உக்ரைனிய பகுதிகள் இணைக்கப்பட்டு வரலாற்றில் முதன் முறையாக உக்ரைன் தேசிய குடியரசு சோசலிச முறையில் உழைக்கும் மக்களுடையதாக உருவானது.

பிற்போக்கு கலாசாரங்களை தூக்கிப்பிடிக்கும், மக்களை சுரண்டும் சிறுபான்மை வர்க்கங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன.

சோவியத் யூனியனின் உணவுக் களஞ்சியமாக விளங்கிய உக்ரைனில் ஆயுதத் தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளும், சுரங்க மற்றும் தொழில்துறையில் பயன்படும் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் செழித்திருந்தன.

உதாரணமாக, தற்போது இந்தியாவின் நடுத்தர ரக இராணுவ போக்குவரத்து விமானங்கள் அனைத்தும் உக்ரைனில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன........

(தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2014 - 13.04.2014



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**எண்ணங்களை எளிதில் செயலாக்கிக் காட்டும் சிம்ம இராசி நேயர்களே!**

**பொதுவாழ்வில் புகழ் கூடும் நேரம்!**

### மாமன், மைத்துனர் வழியில் ஒரு மங்கலச் செய்தி வந்து சேரும்

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் சூரியன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கின்றார். யோகம் தரும செவ்வாய் வக்ர இயக்கத்தில் இருக்கிறார்! எனவே, சில காரியங்களில் தாமதங்களும், தடைகளும் வந்தாலும் கடைசி நேரத்தில் காரியங்கள் கை கூடிவிடும். புதன் பார்வை உங்கள் ரர்சியில் பதிவதால் மாமன், மைத்துனர் வழியில் ஒரு மங்கலச் செய்தி வந்து சேரும். அவர்களின் குடும்பத்தில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்தி வைபபீர்கள்.

தன ஸ்தானாதிபதி புதன் சப்தம ஸ்தானத்தில் இருப்பது யோகம் தான். எதிர்பாராத விதத்தில் பாக்கிகள் வசூலாகும். தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். கூட்டு முயற்சிகளில் ஒரு சிலரை மாற்றம் செய்துவிட்டு புதியவர்களை சேர்த்துக் கொள்வீர்கள். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெற குருவின் சஞ்சாரம் பலமாக இருக்கிறது.

குரு வக்ர நிவர்த்தியாகி இம்மாதம் சஞ்சரிப்பதால் குதூகலம் தரும் சம்பவங்கள் நிறையவே நடைபெறலாம். குழப்பங்களிலிருந்தும் விடுபட இயலும். பஞ்சம அஷ்டமாதிபதியான குரு வக்ர நிவர்த்தியாகி சஞ்சரிக்கும் இம்மாதத்தில் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். நூதன வியாதிகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். பிள்ளைகளின் கடல் தாணடும்முயற்சி அல்லது கல்யாண முயற்சிகளுக்கு முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். சொத்து விற்பனையில் ஆதாயம் அதிகமாகவே கிடைக்கும்.

எனவே, புதிய சொத்துக்களை வாங்கிச் சேர்க்க வேண்டு மென்ற எண்ணம் மேலோங்கும். சூரிய பலம் குறைவாக இருப்பதால் அரசு வழித் தொல்லைகள் மற்றும் அதிகாரிகளால் ஒரு சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். கொடுக்கல்- வாங்கல்களிலும் ஒரு சில ஏமாற்றங்கள் உருவாகும்.

இம்மாதம் உங்கள் ராசிக்கு 6, 7-க்கு அதிபதியான சனி வக்ரம் பெறுகிறார். 6-க்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால் எதிரிகளின் பலம் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட தூரத்தில் மாறுதல்கள் உருவாகலாம். அதே நேரத்தில் சப்தமாதிபதியாகவும் சனி விளங்குகிறார். எனவே வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் வந்து கொண்டேயிருக்கும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உங்கள எண்ணங்களைச் செயலாக்க குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமா என்பது சந்தேகம் தான்.

பிறருக்காக பொறுப்பெடுத்துச் செய்த சில காரியங்களில் அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயங்கள் கொஞ்சம் குறைவாகக் கிடைக்கும். உழைப்பிற்கேற்ப பலன் கிடைப்பது அரிது. விலகிச் சென்ற உறவினர்களால் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுக்கலாம். என்னயிருந்தாலும் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகமாகப் பெற்றவர்கள் நீங்கள். எனவே எதையும் சமாளிக்கும் திறமை நிறைய உண்டு. குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 28 ஆம் திகதி தன லாபாதிபதியான புதன் நீச்சம் பெறுகிறார். எனவே, குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கலில் சில தடுமாற்றங்களை சந்திக்க நேரிடும். பற்றாக் குறை அதிகரிக்கும். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும் சூழ்நிலையிருக்கிறது. என்னயிருந்தாலும் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகமாகப் பெற்றவர்கள் நீங்கள். எனவே எதையும் சமாளிக்கும் திறமை நிறைய உண்டு. குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து செல்வதன் மூலமே அமைதி காண இயலும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 3, 10-க்கு அதிபதியான சுக்ரன் மார்ச் 31 ஆம் திகதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் விளைவாக தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கேட்ட இடத்திலிருந்து தொகை கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். உறவினர்களும், உடன்பிறப்புகளும். உற்சாகத்துடன் வந்து உதவிக்கரம் நீட்டுவர். வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். வியாபார விரோதங்கள் விலகும். இம்மாதம் பிரதோஷ வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வாங்கல்-கொடுக்கல்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய மாதமாகும். அக்கம், பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் குடும்ப பிரச்சினைகளைச் சமாளிக்க இயலும். குருவின் பார்வை பஞ்சம ஸ்தானத்தில் பதிவதால் பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். வீடு மாற்றங்களை ஒரு சிலர் சந்திக்க நேரிடலாம். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய மாதமிது.

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாமல் பேசும் கன்னி இராசிநேயர்களே! வாய்ப்புக்கள் வாயில் கதவைத் தட்டும் நேரம்!**

### இனத்தார் பகை மாறி எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும்

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசியிலேயே செவ்வாய் வக்ரம் பெற்றிருக்கிறார். 5, 6-க்கு அதிபதியான சனியும் வக்ரம் பெற்றிருக்கிறார். வக்ர நிவர்த்தியான குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிகிறது. எனவே, பணப்பற்றாக்குறை அகலும். பாராட்டும், புகழும் கூடும். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து உள்ளம் மகிழ்வீர்கள்.

செவ்வாய் வக்ரம் பெறுவது யோகம் தான். திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமைமிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். கட்டளைக்கு அடிபணியும் பணியாளர்களில் ஒரு சிலரை மாற்ற முயற்சிப்பீர்கள். கடிதத்தில் வரும் தகவல் தொழில் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

தொலைதூரப் பயணங்களை நினைத்தபடியே மேற்கொள்வீர்கள். தொல்லை தந்த எதிரிகளின் பலம் குறையும். மனதளவில் நினைத்திருந்த காரியங்கள் பல மாதங்கள் கடந்தும் செய்ய முடியவில்லையே என்ற கவலை இனி மாறும். நினைத்த நேரத்தில் செய்து முடிக்கும் விதத்தில் சுக்ரனின் இயக்கம் இருக்கிறது. நிகழ்காலத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

விரயாதிபதி சூரியன் ஏழிலிருந்து உங்கள் ராசியைப் பார்க்கிறார். ஏழரைச் சனியின் ஆதிக்கமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உத்தியோகம் மற்றும் தொழிலில் வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்வோமா? வேண்டாமா? என்ற சிந்தனை அதிகரிக்கும். காரணம், ஏழரைச் சனியின் ஆதிக்கமாகும். ஏழரைச் சனி இரண்டாவது சுற்று நடப்பவர்களாக இருந்தாலும், முதல் சுற்று நடப்பவர்களாக இருந்தாலும், முன்னேற்றத்திற்கு சில குறுக்கீடுகள் வரத்தான் செய்யும். சனிக்கிழமை தோறும் சனி பகவான் வழிபாட்டை மேற்கொண்டால் சஞ்சலங்கள் தீரும். சந்தோஷங்கள் சேரும்.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்ற பொழுது, எந்த நாளான போதும் இனிய நாளாக மாற வேண்டுமானால் கவசம் படித்து காக வாகனத்தானை வழிபட வேண்டியது அவசியமாகும். அந்த அடிப்படையில் நீங்களும் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அருகிலிருக்கும் ஆலயத்திற்கு சென்று சனி பகவான் சன்னிதியில் எள் தீபம் ஏற்றுங்கள். நல்ல சம்பவங்களை நாளும் சந்திக்க இயலும். சனியின் ஆதிக்க காலத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலமே பெருமைகள் வந்து சேரும்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 28ஆம் திகதி மீன ராசியில் புதன் நீச்சம் பெறப் போகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறுவது யோகம்தான். இதன் விளைவாக தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொகை கேட்ட இடத்திலிருந்து கிடைக்கும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் வீட்டுப் பணிக்கு ஒத்துழைப்பு செய்ய முன்வருவர்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

கும்ப ராசியில் மார்ச் 31 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 2, 9-க்கு அதிபதியான சுக்ரன் 6இல் சஞ்சரிக்கும் போது கடன் சுமை குறையும். இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும. வாங்கல்-கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வளர்ச்சிகூடும் இந்த நேரத்தில் வீடு சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். குடும்பச் சுமை கொஞ்சம் கூடுதலாக இருந்தாலும் அதைச் சமாளித்து வெற்றி காண்பீர்க்ள். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பயணங்களால் பலன் கிடைகும் மாதமாக அமையப் போகிறது. பக்குவமாகப் பேசிக் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாமே என்ற சிந்தனை மேலோங்கும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். அடிக்கடி பயணங்களை மேற்கொள்வதன் மூலம் அலைச்சல்கள் ஏற்பட்டு ஆரோக்கியக் குறைபாடுகள் உருவாகலாம். கவனம் தேவை. ராகு-கேது பிரீதி நன்மைகளை வரவழைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர வகுப்புகளில் தொழில்நுட்பப் பாடத்துறை அறிமுகம், நடைமுறைகள், எதிர்பார்ப்புகள், சவால்கள்



கலாநிதி
திருமதி ஜெ.இராசநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(நேற்றைய தொடர்ச்சி...)

**அமுலாக்க நடைமுறைகள்**

தொழில்நுட்பப் பாடத்துறை அறிமுகம் என்பது திட்டமிட்ட ஒரு பெரிய செயற்றிட்டத்தின் மூலமாகவே சாத்தியமாகின்றது. இதனடிப்படையில் பொறியியற் தொழில்நுட்பவியல் மற்றும் உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களை அறிமுகப்படுத்தலில் அதற்குப் பொருத்தமான, பொறுப்பான ஆசிரியர்களின் பாட அறிவு மற்றும் தொழில் நுட்பபாடப் பிரயோகத் திறமைகளை விருத்தி செய்தல் அவசியமாகும்.

அத்தோடு இதனை நடைமுறைப்படுத்தும் போது பாடத்துக் குப் பொருத்தமான உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களின் செயற்பாடுகளும் உறுதிப்படுத்தப்படல் அவசியமாகும்.

இவற்றை அமுல்படுத்தும் போது பாட உபகரணங்களின் பயன்பாடு கருதி அதனைக் கொள்வனவு செய்தல் முக்கியமாகும். அத்துடன் தொழில்நுட்பப் பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. புதிய பாடத்துறையாதலால் மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன.

பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு அறிமுறைப் பரீட்சைக்காக 75 புள்ளிகளும் செய்முறைப் பரீட்சைகளுக்காக 25 புள்ளிகளும் வழங்கப்படுகின்றன. செய்முறைப் பரீட்சையை பாடசாலைக்கு அண்மையில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அல்லது தொழில்நுட்பக் கற்கை அலகுகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அறிவுரைப்பு வழிகாட்டியில் பாடசாலை மட்டக் கணிப்பீடு எவ்வகையில் நடத்தப்படும் என்பதுவும் குறிப்பிடப்பட்டுள்ளது எனினும் இறுதி மதிப்பீடு பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் என்பதுவும் முக்கியமான அம்சமாகும்.

இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்ததும் மூன்று பாடங்களுக்கும் கோட்பாட்டு அறிவுக்கான பரீட்சை நடத்தப்படும். இதற்கு 75 வீதமும் எஞ்சிய 25 வீத புள்ளி பெற்றுக்கொடுக்கப்படுவது பயிற்சி நிறுவனங்களில் மேற்கொள்ள படும் வேலைகளுக்காகும்.

எனவே இப் பாடநெறிகள் அறிவோடு மாத்திரமன்றி செய்தையும் அளவீடு செய்யும் பாடத்துறையா கும். இத்தகைய முறையில் உயர் தரத்தில் சிறப்பாக சித்தியடைந்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று தொழில்நுட்பவியல் பட்டப் பாட நெறியைத் தொடர முடியும்.

இதன் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டாகும் போது அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தொழில் நுட்பவியல் பீடத்தை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தீர்மானமாகும்.

இத்தகைய பாடங்களைப் பயிற்றுவிப்பதற்காக 300 ஆசிரியர் கள் பயிற்றப்பட்ட வேளையில் எதிர்காலத்தின் தேவை கருதி மேலும் 700 ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் நடைபெறுமெனக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. வளவாளர்களாகத் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் வரவழைக்கப்பட்டு மேலதிக வேதனமும் வழங்கப்படும்.

ஏதோவொரு காரணத்தால்தொழிலநுட்ப பாடத்துறையைத் தெரிந்தெடுத்துப் பரீட்சையில் தோல்வி அடைந்தாலும் அம் மாணவர் வாழ்க்கையில் தோல்வி அடைந்தவராகமாட்டார். ஏனெனில் அவர் பெற்றுக்கொண்டுள்ள பிரயோக அறிவுக்கு ஏற்ப திறன் விருத்தி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை மூன்றாம் மட்டம் இம் மாணவர்களுக்குக் கிடைக்கும். இதன் மூலம் தொழில் பெறுவது இலகுவாகும்.

***தொழில்நுட்பக் கற்கை நெறி பாட ஒழுங்குகள்:-***

இங்கு குறிப்பிடப்படும் இரண்டு பெரும் பிரிவுகளில் பொறியியல் தொழில்நுட்பவியல் (Engineering Technology) துறையானது நிர்மாணிப்புத் தொழில்நுட்பவியல், சுற்றாடல் பிரச்சினைகள் ஆகிய துறைகள் சார்ந்ததாகும் இதில் தரம் 12ற்குரிய பாட அலகுகளில் பின்வருவன உள்ளடக்கப்படும்.

| இல. | தரம் 12 | இல. | தரம் 13 |
|---|---|---|---|
| 01 | பொறியியல் தொழில்நுட்பத்திற்கான அறிமுகம் | 01 | மின் இயந்திரங்களும் வலுமுறைமையும் |
| 02 | அடிப்படை மோட்டார் வாகன தொழில்நுட்பம் | 02 | அடிப்படை இலத்திரனியலும் அவற்றின் பிரயோகமும் |
| 03 | அடிப்படை மின் தொழில்நுட்பம் /வீட்டு மின் சுற்று | 03 | வீட்டு நீர் விநியோகமும் சுகநல வசதிகளும் |
| 04 | அடிப்படை கட்டுமான தொழில்நுட்பம் | 04 | திரவ இயந்திரங்கள் |
| 05 | அடிப்படை உற்பத்தி தொழில்நுட்பம் / பொருத்தும் தொழில்நுட்பம் | 05 | பொறியியல் தரங்களும் தரக்கட்டுப்பாட்டு முறைமைகளும் |
| 06 | பொறியியல் வரைபுகள் | 06 | அளத்தல் |
| 07 | அலகுகளும் அளவீடுகளும். | 07 | மதிப்பீடும் B.O.Q வை தயாரித்தலும் |
| 08 | இயக்க மற்றும் வலு ஊடு கடத்தும் மூலங்கள் | 08 | முயற்சியாண்மையும் முகாமைத்துவமும் |
| 09 | தொழில்நுட்பம் தொடர்பான பாதுகாப்பும் சுகாதாரமும். | | |

இதேபோன்று உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் கீழ்வரும் பாட அலகுகளைக் கொண்டு அமைந்துள்ளது.

| இல. | தரம் 12 | இல. | தரம் 13 |
|---|---|---|---|
| 01 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்தின் அறிமுகம் | 01 | கால்நடை வளர்ப்பு |
| 02 | நீரியலும் கால நிலையியலும். | 02 | உணவு தற்காப்புத் தொழில்நுட்பம் |
| 03 | மண்ணும் நீரும் | 03 | பண்ணைக் கட்டமைப்புகள் |
| 04 | அளவையும் மட்டப்படுத்தலும் | 04 | ஆளுகை நிபந்தனையின் கீழான பயிர்ச் செய்கை |
| 05 | தாவர இனப்பெருக்கத் தொழில்நுட்பம் | 05 | மலர்ச் செய்கையும் தரை அலங்கரிப்பும் |
| 06 | உணவுப் பாதுகாப்பும் சட்ட வரையறையும் ண | 06 | பண்ணைப் பொறிமுறைப்படுத்துகை |
| 07 | அறுவடைக்குப்பிந்திய தொழில்நுட்பம் | 07 | மீன்பிடியும் நீருயிரின வளர்ப்பும் |
| 08 | உணவுகளைப் பொதியிடலும் பெயர்ச் சுட்டியிடலும் | 08 | காடுகளும் வன உற்பத்தியும் |
| 09 | உணவுச் சேர்மானங்கள் | 09 | தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும். |
| 10 | அடிப்படை இலத்திரனியல் | 10 | முயற்சியாண்மை |
| 11 | நீரின் தரம் | | |
| 12 | நீருயர்த்தல் | | |
| 13 | நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் | | |
| 14 | பீடை முகாமைத்துவம் | | |
| 15 | செயற்றிட்டங்கள் | | |

இக் கற்கை நெறிக்கான குறைந்தளவு தகைமையாக கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு யாதேனும் 3 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மூன்றாவது பாடத்தைக் கீழ் காட்டப்பட்டுள்ள பாடங்களிலிருந்து தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

| இல. | பாடம் |
|---|---|
| 01 | பொருளியல் |
| 02 | புவியியல் |
| 03 | மனைப்பொருளியல் |
| 04 | ஆங்கிலம் |
| 05 | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் |
| 06 | தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| 07 | சித்திரம் |
| 08 | வணிகக்கல்வி |
| 09 | விவசாய விஞ்ஞானம் |
| 10 | கணக்கீடு |

இக் கற்கை நெறியின் முடிவில் இவர்கள் சிந்திப்பவர்களாக மட்டும் இல்லாமல் செயற்படவும் கூடியவர்களாக விளங்குவர். காலக்கிரமத்தில் தனது படிப்பைத் தொடர்ந்து உயர் பேராசிரியர்களாகவும் வரும் வாய்ப்பு உண்டு.

**அமுல்படுத்தலில் சந்திக்கும் சவால்கள்.**

1. பௌதீக வள, மனித வள பற்றாக்குறை ஏற்படும்.
2. இக்கற்கை நெறி தொடர்பான பெற்றோர் மற்றும் சமுதாயத்தின் மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்படாமை.
3. இக் கற்கை நெறி பற்றிய பூரண விளக்கமின்மை.
4. பெண் பிள்ளைகள் தொடர்பான பெற்றோரின் பய உணர்வு.
5. நடைமுறைப்படுத்தலில் நிதிப் பற்றாக்குறை.
6. பொருத்தமான தொழில் வாய்பபுக்களோடு மாணவர்களைப் பொருத்தலில் பிரச்சினை.
7. ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கலில் பிரச்சினை.
8. மேலதிக ஆசிரியர்களை உள்வாங்குதலில் பிரச்சினை.
9. எதிர் காலத்தில் இக் கற்கை நெறியைத் தொடர்வதற்குத் தனியான பல்கலைக்கழகங்களை அமைத்தலில் பிரச்சினை.

இத்தகைய பல சவால்களையெல்லாம் எதிர்கொண்டு எதிர்காலத்தில் இக் கற்கை நெறியைப் பரவலாக்கும் எண்ணம் அரசின் உத்தேச வேலைத்திட்டங்களில் உணடு.

**இக் கற்கை நெறி தொடர்பான எதிர்காலத்தின் எதிர்பார்ப்புக்கள்:-**

1. மாணவர்களுக்கு வேலை உலகம் தொழில்நுட்ப உலகம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படல.
2. வாழ்க்கையில் தோல்வி என்ற மனப்பான்மையில் இருந்து விடுபடல்.
3. பல்கலைக்கழகத்துக்குச் செல் வோர் தொகையில் அதிகரிப்பு ஏற்படல்.
4. கலைப்பட்டதாரிகளுக்கான தொகை குறைவடைதல்.
5. நடைமுறை வாழ்க்கையும் கல்வியும் தொடர்புபடல்.
6. கோட்பாட்டு ரீதியான அறிவு மட்டுமல்லாமல் நடைமுறை தொடா பான அறிவின் பிரயோகம்.
7. உயர் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளும் வாய்ப்பு.
8. வெளிநாடுகளுக்கான புலமைப்பரிசில் திட்டங்கள்.
9. மாணவர்களின் மனச் சோர்வு, பதகளிப்பு குறைதல்.
10. தொழில்நுட்பக் கல்வியின் கைத்தொழில்களுக்குமான பொருத்தப்பாட்டை அதிகரித்தல்.
11. தேவையானவர் களுக்கு தொழி ற்றிறன் பயிற்சிகளை உரியவாறு கிடைத்தல்.

இத்தகைய எதிர்பார்ப்புக்களையெல்லாம் வழங்கும் பல திட்டங்களை உள்வாங்கிய அரசின் இப் புதிய திட்டத்தின் வெற்றியில் எதிர்காலம் பிரகாசிக்கும் என்பது மாணவர்களது எதிர்பார்ப்புகளாகும்.

**பரிந்துரைகள் :-**

1. இக் கற்கை நெறிக்கான பாடசா லைகளின் எண்ணிக்கையை அதிக ரிக்கும் போது எதிர்காலத்தில் கற்கும் மாணவர் தொகை அதிக மாகலாம்.
2. திட்டத்தின் முழுமையான வெற்றிக்கு ஆசிரியர்களின் பயிற்சியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
3. கிராமங்களின் இயற்கை வளங்களை இத்திட்டத்தின் மூலம பயன்படுத்தும் போது கிராமங்கள் எழுச்சி பெறும் வாய்ப்பு உண்டு.
4. ஆசிரிய வளத்தை தெரிவு செய்தலில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைப் பயன்படுத்தல்.
5. மாணவர்களுக்கான விடுதி மற்றும் வசதிகளை ஏற்படுத்தல்.

எனவே 1000 இடை நிலைப்பாடசாலைகளின் க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞான,கணித, தொழல் நுட்ப பாடத்துறைக்கான 27 சத வீதத்தை 35 வீதமாக அதிகரிப்பதற்கும் கலைப்பாடத்துறையின் 51 வீதத்தை 25 வீதமாகக் குறைத்து ஏனைய பாடத்துறைகளில்அறிவைப் பெறுவதற்கும் தகவல் தொழில்நுட்ப எழுத்தறிவு 35 வீத்திலிருந்து 75 வீதமாக அதிகரிப்பதும் என்ற வகையிலான அரசின் எதிர்கால இலக்கு என்பது இத்தகைய திட்டஙகளைச் சரியான முறையில் அமுல்படுத்தும் போது வெற்றி தரும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்வாழ் புலி ஆதரவாளர்கள் ஈழக்கனவு காண்கிறார்கள்

## நாமல் எம்.பி. கூறுகின்றார்

(கொழும்பு)

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் ஈழக் கனவு கண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். களனியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும். புலம்பெயர்ந்து வாழும் சில தரப்பினர் தொடர்ச்சியாக இலங்கை மீது யுத்தம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு வழிகளில் தமிழீழத்தை நிறுவும் நோக்கில் இவ்வாறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியின் மூலம் நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் புலி ஆதரவு தமிழர்கள் இன்னமும் ஈழக் கனவை விட்டுக்கொடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் காலனித்துவ ஆட்சியாளர்களும் புலி ஆதரவு தரப்பினருக்கு உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் நாட்டில் வன்முறைகளை வெடிக்கச் செய்யும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீய சக்திகளுடன் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இணைந்து கொண்டுள்ளமை வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். மக்கள் அரசாங்கத்தின் மீது வலுவான நம்பிக்கை கொண்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# யுத்த வெற்றி கொண்டாட்டம் இம்முறை மாத்தறையில்

இலங்கையில் இடம்பெற்ற 30 வருட கால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை கொண்டாடும் நிகழ்வு இம்முறை மாத்தறையில் நடைபெறவுள்ளது. யுத்த வெற்றியின் ஐந்தாம் வருட பூர்த்தியே மாத்தறையில் இடம்பெறவுள்ளது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. முப்படைகளையும் சேர்ந்த 6ஆயிரம் வீரர்கள் யுத்த வெற்றி கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டதை கொண்டாடும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 18ஆம் திகதி யுத்த வெற்றி கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி வேலுப்பிள்ளை பாக்கியம்


பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாக்கியம் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Morden Assembly Hall, Tudor Drive, Morden Surrey SM4 4PJ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி மாரிமுத்து கனகாம்பிகை

நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Saint-Denis ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து கனகாம்பிகை கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு Climetiere Intercommunal des Joncherolles, 95 Rue Marcel Sembat, 93430 Villeianeuse, France என்னும் முகவரியில் நல்லடக்கம் தகனம் செய்யப்படும்.



### முத்துத்தம்பி சபாநாதன்

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியை பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி சபாநாதன் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23.03.2014) காலை 9 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Wood bine Avenue, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி இம்மானுவேல் மேரி தவமணி

இளவாலை வட்டப்புலத்தினைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் மேரி தவமணி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்கிசை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கல்கிசை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### யேசுதாஸன் யூட்ஸ் நிமால்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து Deventer ஐ வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாஸன் யூட்ஸ் நிமால் கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு Stichting Steunfonds Heilige Nicolaas Kerkmore, Het Koeland 90 7433 HK Schalkhaar, Netherlands என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

# மனிதப் பேரவலம் எமது மண்ணில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது

## தொண்டு நிறுவனங்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு மாகாண சபை உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்களை குறுகியகால அவகாசத்துக்குள் இலங்கை அரசாங்கம் பலவந்தமாக வெளியேற்றி, தமிழ் மக்களை திட்டமிட்ட பட்டினிச் சாவுக்குள் இட்டுச் சென்று கொண்டிருக்கின்றது என வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, தேவிபுரம், வள்ளிபுனம், உடையார்கட்டு, விசுவமடு, மல்லாவி, துணுக்காய், பாண்டியன் குளம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் மக்கள் குறைகேள் சந்திப்புகளை நடத்திய பின்னர், அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட நிறுவனத்தால் விழங்கப்பட்டுக் கொண்டிருந்த உணவு வழங்கும் திட்டத்தை, இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான எமது மக்கள் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியேறி, அவர்கள் சுயமாக உழைத்து தமது வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு முன்னரே நிறுத்தி, நாட்டிலிருந்தே ஐ.நாவின் பல்வேறு தொண்டு நல அமைப்புகளையும் இலங்கை அரசு பலவந்தமாக வெளியேற்றியுள்ளது.

MSF, UNICEF, UNDP, WOR LD FOOD PROGRAME ஆகிய முக்கிய நிறுவனங்கள் எமது மக்களின் இடர் நெருக்கடி வாழ்வை, அவல வாழ்வை கணிசமான அளவு நிவர்த்தி செய்து வந்த நிலையில், தன்னால் எதையும் செய்யமுடியும் என்ற போர் வெற்றிக் கர்வத்தில் தொண்டு நிறுவனங்களை வெளியேற்றிய இந்த அரசாங்கம் ஆசியாவின் நோயாளி எனும் தன்னுடைய உண்மை நிலையை மூடி மறைக்க வறட்டுக்கௌரவத்துக்காக சிறிது காலத்திற்கு மட்டும் தன்னி றைவற்ற நிவாரணத்தை வழங்கி விட்டு தற்போது அதையும் நிறுத்தி எமது மக்களை திட்டமிட்ட பட்டினிச் சாவுக்குள் இட்டுச் சென்று கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசின் இத்தகைய போலி ஏமாற்று மோசடி நடவடிக்கைகளால் சர்வதேச தொண்டு நல நிறுவனங்களால் மனிதாபிமான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சுகாதாரம், உளவளம், கல்வி மேம்பாடு, போஷாக்கு, சுயதொழில் வாய்ப்புக்கள் போன்ற நல்ல பல திட்டங்கள் கணிசமான அளவுக்கு குறைவடைந்தும் படுமோசமாக வீழ்ச்சியடைந்தும் பெரும் மனிதப் பேரவலம் எமது மண்ணில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எதிர்காலத்தில் நலிவுற்ற, தேக உள ஆரோக்கியமற்ற ஒரு சமூகம் உருவாகப் போகும் அபாய சூழலை தடுத்து நிறுத்தி, எமது மக்களுக்கான ஊட்டத்தை வடமாகாண சபை ஊடாக வேனும் முன்னெடுப்பதற்கு போதிய நிதியை மத்திய அரசு வழங்காத வங்குரோத்து நிலையில், வாழ்வாதாரமின்றி தவிக்கும் இடம்பெயர்ந்து மீளக்குடியேற்றப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட நிவாரணத்தை வழங்குவதற்கு ஐ.நா. நிறுவனங்களை மீள அழைக்க விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கடந்த 18.02.2014 அன்று நடைபெற்ற வட மாகாண சபை பேரவை அமர்விலும் பிரேரணை நிறைவேற்றி கோரப்பட்டுள்ளது.

எமது மக்கள் தமது தொழிலை பெருக்கி, தம் வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் காலம் உருவாகும் வரை ஐக்கிய நாடுகள் சபை தனது மனிதாபிமான செயற்பாடுகளை தங்கு தடையின்றி சுதந்திரமாக மேற்கொள்ளும் சூழலுடன் கூடியதாகவே இந்த நடவடிக்கைகள் அமைய வேண்டும் எனவும் அவரது அறிக்கையில் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது. (2-6)

# நிறுத்தப்பட்ட உலர் உணவை மீண்டும் வழங்க உதவுங்கள்

## நிதி பெற்றுத் தருவதாக கனடா தூதுவர் அரச அதிபரிடம் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த உலர் உணவு நிறுத்தப்பட்டதனால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, நிறுத்தப்பட்ட உலர் உணவை மீண்டும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகரிடம் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்த இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் ஷெல்லி வைற்றின் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். மாவட்ட அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் சந்தித்து அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடினார். இச் சந்திப்பையடுத்து அரச அதிபர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமானவர்கள் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

எனவே, அவர்கள் மூலம் யாழ்ப்பாணத்தில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்று தூதுவர் என்னிடம் வினவியிருந்தார்.

அவ்வாறான முயற்சிகள் எவையும் இதுவரை இடம்பெறவில்லை. எனினும் நீங்கள் உங்கள் நாட்டிலுள்ள புலம்பெயர் தமிழர்களிடம் பேசுங்கள். அவர்கள் முதலீடுகளை செய்வதற்கு முன்வருவார்கள். ஆனால், நாமும் அதற்கு ஒத்துழைப்பை வழங்குவோம். இங்கு முதலீடு செய்வதற்கு எவ்வித தடைகளும் இல்லை. அவர்கள் தமது முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்று பதிலளித்தேன்.

அதேவேளை பாடசாலைகளுக்கு வழங்கப்படும் உணவுத்திட்டம் தொடர்பாக ஆராய்ந்த வேளையில், இத்திட்டத்தின் மூலம் 429 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதில் 328 பாடசாலைகளில் உணவு சமைப்பதற்கான சமையலறை உண்டு. மிகுதி பாடசாலைக்கு சமையலறை இல்லாத நிலை காணப்படுகின்றமையைச் சுட்டிக்காட்டியிருந்தேன். ஆகவே அதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், போருக்கு பின்னர் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்திற்கு புகையிரத சேவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மேலும் போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்த உதவிகளை கனடா வழங்கும் என்றும் என்னிடம் தெரிவித்திருந்தார்.

அத்துடன் உலக உணவு திட்டத்தை யாழ்ப்பாணத்திலுள்ள மேலும் பல பாடசாலைகளுக்கு வழங்குமாறு நான் தூதுவரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். அதற்கான நடவடிக்கையை தமது நாட்டுடன் கலந்துரையாடலை மேற்கொண்டதன் பின்னர் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கும் பெண் தலைமைக் குடும்பங்களுக்கும் அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு உதவித்திட்டங்களை வழங்குமாறும் அவர்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளேன்.

அத்துடன் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு நிறுத்தப்பட்ட உலர் உணவானது மீண்டும் வழங்க வேண்டும் என கோரியிருந்தேன். இதற்கு பதிலளித்த கனடா தூதுவர், கனடா அரசாங்கத்திற்கு இந்த விடயத்தை தெரியப்படுத்தி இதற்கான நிதியைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார் என்று மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரது எலும்புக்கூடு மீட்பு; வ.மா.ஆசிரியர்கள் போராட்டம்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் கற்பித்த ஆசிரியர் கடத்தப்பட்டு தற்போது எலும்புக்கூடாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதை கண்டித்து வட மாகாண ஆசிரியர்களை ஒன்றிணைத்து போராட்டமொன்றினை நடத்தவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாங்குளம் பாடசாலையில் கற்பித்த கார்த்திகேசு நிருபனின் எலும்புக்கூடே முல்லைத்தீவு மாங்குளம் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் நிலையிலே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், போர் முடிவடைந்து 3 வருடங்களுக்கு மேலாகியுள்ள நிலையில் ஆசிரியர் ஒருவர் கடத்தப்பட்டு அவருடைய எலும்புக்கூடு கிடைத்திருப்பதை, இலங்கை ஆசிரியர் சங்கம் என்ற வகையில் நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அத்துடன் ஆசிரியர் கடத்தப்பட்டு எலும்புக்கூடு கிடைக்கும் வரையிலான நிலைமை காணப்படுகின்றது என்றால் அது வடமாகாணத்தின் பாதுகாப்பை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

ஆசிரியர் கடத்தப்பட்ட விடயம் தொடர்பாக கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாம் ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்திருந்ததோடு மனிதவுரிமை ஆணைக்குவிற்கு முறைப்பாட்டையும் பதிவு செய்திருந்தோம். அத்துடன் பொலிஸ்மா அதிபரிடமும் முறைப்பாடு செய்திருந்தோம். ஆனாலும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் எமக்கு மனிதவுரிமை ஆணைக்குழு உட்பட யாரும் பதில் கூட அனுப்பவில்லை. இவ்வாறான நிலையிலேயே எலும்புக்கூடு கிடைத் துள்ளது.

எனவே, வடமாகாணத்தில் சகல ஆசிரியர்களும் ஒன்றிணைந்து இனி வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாது இருப்பதற்கும் இச் செயலை கண்டித்தும் பாரிய செயற்பாடொன்றை முன்னெடுக்கவுள்ளோம் என்றார். (2-9-250)




## நிதி ஒதுக்கீட்டில் வீதி புனரமைப்பு


(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபை துணைத்தவிசாளரின் ஒதுக்கப்பட்ட நிதியினூடாக கிளிநொச்சி விவேகானந்தா நகர் புகையிரத வீதிக்கு அருகாமையிலுள்ள வீதி புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

குறித்த வீதி சேதமடைந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலுள்ளதாக மக்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சுமார் 1 1/2 கிலோ மீற்றர் தூரமுடைய குறித்த வீதியின் புனரமைப்பு வேலைகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதியினூடாக கரைச்சி பிரதேச சபையின் துணைத் தவிசாளர் நகுலேஸ்வரன், வீதி புனரமைப்பு வேலைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9-271)



சேட் அமைப்பானது கிளிநொச்சியில் கரைச்சி, பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக ளிலும் வவுனியா மாவட்டத்திலும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) நிதியுதவியுடன் மிதிவெடி அபாயக் கல்வியை வழங்கி வருகின்றது. இந்நிலையில் மிதிவெடியால் பாதிக்கப்பட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் பொன்னகர் கிராமத்திலுள்ள பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார உதவி அண்மையில் பயனாளியின் வாழ்விடத்தில் சேட் அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆ.உமாபதியினால் வழங்கப்பட்ட போது....

# முல்லைத்தீவு சந்தை நடைமுறையினை அளம்பில் சந்தைக்கும் நடைமுறைப்படுத்துங்கள்

## பாதிக்கப்பட்ட வியாபாரிகள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

அளம்பில் பொதுச்சந்தைக்கு 300 மீற்றர் தூரத்திலுள்ள அளம்பில் சந்திப் பகுதியில் இராணுவத்தினர் மரக்கறிகளை குறைந்த விலையில் விற்பனை செய்வதனால் மரக்கறி சந்தை வியாபாரிகள் பாதிப்படைவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

அப் பிரதேசத்திலுள்ள 24 ஆவது பற்றாலியன் சிங்கர் றெஜிமென்ட் படைப் பிரிவினர் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மரக்கறித் தோட்டம் செய்து வருகின்றனர்.

இங்கு பெறப்படும் மரக்கறிகளை அளம்பில் சந்தியிலுள்ள இராணுவத்தினரின் தேநீர்ச்சாலையில் வைத்து குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறாக இராணுவத்தினர் குறைந்த விலையில் மரக்கறிகளை விற்பனை செய்வதனால் மக்கள் சந்தையை நாடுவது குறைவாகவுள்ளது. இதனால் அளம்பில் பொதுச் சந்தையிலுள்ள மரக்கறி வியாபாரிகள் தமது வியாபாரத்தினை முன்னேற்ற முடியாதுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலை தொடருமானால் தமது தொழிலில் பாரிய நட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுமென அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள இராணுவத்தினர் தாம் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற மரக்கறிகளை முல்லைத்தீவு பொதுச் சந்தையிலுள்ள வியாபாரிகளிடம் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர்.

எனவே, முல்லைத்தீவிலுள்ள நடைமுறையினை இராணுவத்தினர் அளம்பில் பொதுச் சந்தையிலும் பின்பற்ற முல்லை.மாவட்ட இராணுவத் தளபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட அளம்பில் பொதுச் சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-267)

# மாணவர்களை ஏற்றாது செல்லும் தனியார் பேருந்துகள்

## கவனத்தில் எடுக்குமாறு பெற்றோர் வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-கொக்கிளாய் வழித்தட தனியார் பேருந்துகள் பாடசாலை மாணவர்களை ஏற்றாமல் செல்வதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கொக்குத் தொடுவாய் அ.த.க.பாடசாலையில் கல்வி பயில்கின்ற கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பேருந்திற்காக காத்திருந்தனர்.

அவ்வேளை அவ்விடத்தினால் முல்லைத்தீவு- கொக்கிளாய் வழித்தட தனியார் பேருந்துகள் இரண்டு, பிற்பகல் 2.20இற்கும் 2.23 இற்கும் அவ்வீதியூடாகப் பயணித்தன.

ஆயினும் மாணவர்களை ஏற்றவில்லை. இதனால் மாணவர்கள் பல மணித்தியாலங்கள் காத்திருந்து பின்னர் அவ்வீதியூடாக பயணித்த பேருந்தில் சென்று வீடு சேர்ந்துள்ளனர்.

நேரம் பிந்தியமையால் மாணவர்கள் மாலை வேளை வகுப்புக்களில்பங்குகொள்ள முடியாத நிலைக்குட்பட்டுள்ளனர்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு, முல்லை.மாவட்ட தனியார் பேருந்து ஓட்டுநர்களும் நடத்துநர்களும் மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-9-267)

# கொட்டப்படும் கழிவுகளால் சுகாதார சீர்கேடு தோன்றும் நிலை

## விரைவுபடுத்தி நடவடிக்கை எடுங்கள்



( கிளிநொச்சி)

உருத்திரபுரம் மயானத்திற்கு அருகிலுள்ள கனகபுரம் 10 ஆம் பண்ணை குடியிருப்பின் பின் புறமாக இனந்தெரியாதோரால் கழிவுகள் கொட்டப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மேற்படி பகுதியில் கழி வுகள் அன்றாடம் கொட்டப் படுவதனால் துர்நாற்றம் வீசுகின்றது.

இந்நிலையில் குறித்த வீதியினை புதுமுறிப்புக் குளம், கனகபுரம், உருத்திரபுரம், கோணாவில் கிராமத்தின் ஒரு பகுதி ஆகிய கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு இவ்வாறாக கழிவுகள் கொட்டப்படும் இடத்திற்கு அருகாமையில், கழிவு வாய்க்காலின் நீர் வழிந்தோடி வந்து தேங்குகின்றமையால் பள்ளமொன்றும் காணப்படுகின்றது.

குப்பைகளும், கழிவு நீரும் அவ் விடத்தில் தேங்குவதால் சுகாதாரச் சீர்கேடாக காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, இதுதொடர்பில் மாவட்ட சுகாதாரப் பகுதியினரும் பிரதேச சபையின்ரும் நட வடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (2-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி பத்திரிகைதாம் உலகைக் காட்டும் கண்ணாடிகள்.
- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புகைவண்டி யாழ் வரும் வேளை சொகுசு பஸ்வண்டி எரியுது பார்!

யாழ்ப்பாணம்-கொழும்பு போக்குவரத்து சேவையில் ஈடுபடும் இரண்டு சொகுசு பஸ்கள் இருவேறு கால இடைவெளியில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

ஓடும் பஸ் வண்டி தீப்பற்றி எரிந்து போன சம்பவங்கள் ஏதேனும் அடிக்கடி தென்பகுதிகளில் நடந்ததான தகவல்களைப் பெற முடியவில்லை என்பதற்கு அப்பால், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் வந்து கொண்டிருந்த சொகுசு பஸ் அதிகாலை வேளை கனகராயன்குளம் பகுதியில் முற்றாக எரிந்து போயுள்ளது.

இது போன்ற சம்பவம் சில மாதங்களுக்கு முன்னர் நடந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

கொழும்பு- யாழ் பஸ் சேவையில் இரண்டு சொகுசு பஸ்கள் முற்றாக எரிந்து போயிருந்தாலும் தெய்வாதீனமாக பயணிகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

அதேநேரம் பயணிகளின் உடமைகள் எரிந்து நாசமாகின என்ற செய்திகள் துன்பம் தருவதாகும்.

பயணிகளை ஏற்றி வந்த சொகுசு பஸ் முற்றாக எரிந்து போவதற்கான காரணம் என்ன? என்பது கண்டறியப்பட வேண்டும்.

கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதிகளை கொண்ட சொகுசு பஸ் சர்வசாதாரணமாக எரிந்து போகின்றது என்ற விடயம் அசமந்தமாக விடக்கூடியதல்ல. அதிலும் பயணிகள் கடும் தூக்கத்தில் இருந்த வேளையில் பஸ்கள் எரிந்துள்ளன என்பதால், இந்த விடயத்தில் காட்டப்படும் அசமந்தம் எதிர்காலத்தில் பயணிகளும் உயிரிழக்கும் ஆபத்தை ஏற்படுத்தலாம்.

எனவே கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சொகுசு பஸ்கள் முற்றாக எரிந்து போனதன் பின்னணி என்ன என்பது கண்டறியப்பட வேண்டும்.

இயந்திரக் கோளாறு காரணமாகவே பஸ்கள் எரிந்தன என்றால், இந்த பஸ்களை நம்பி உடமைகளுடன் பயணிப்பது பாதுகாப்பானதா? என்ற கேள்வி எழும்.

இப்போதெல்லாம் வாகன விபத்துகளே வடக்கில் இடம்பெறும் இறப்பின் காரணத்தில் முதலிடம் பெற்றுள்ளன. நாளாந்தம் நடக்கும் விபத்து மரணங்களால் வீதியில் இறங்கவே பயமாக இருக்கும் வேளையில், பயணிக்கும் பஸ்சும் எரியலாம் என்றால் எப்படித்தான் நிம்மதியாகப் பயணிப்பது?

ஆகவே இருபெரும் சொகுசு பஸ்கள் எரிந்து போன சம்பவத்தை வேடிக்கையான-ஆச்சரியமான செய்தியாகப் பார்க்காமல் அதற்கான காரணங்களைக் கண்டு கொள்வது கட்டாயம்.

இது விடயத்தில் கவனம் செலுத்தி உண்மைத்தன்மையை பொது மக்களுக்கு வெளிப்படுத்துவது யாழ்-கொழும்பு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களின் தார்மீகப் பொறுப்பு.

யாழ்ப்பாணத்தை நோக்கி வருவதற்கு புகையிரத வண்டிகள் ஆயத்தமாகி இருக்கும் இவ்வேளையில்,

சொகுசு பஸ்கள் எரிந்தால் பயணிகள் என்ன தீர்மானம் எடுப்பார்கள் என்பதை நாம் சொல்லி நீங்கள் அறிய வேண்டிய அவசியம் இல்லை. ஆகையால்; யாழ்-கொழும்பு பஸ் சேவை, அதில் பணியாற்றுபவர்களின் வேலை வாய்ப்பு என்பன கருதி சொகுசு பஸ் வண்டிகள் எரிந்து போனதன் பின்னணிகளை தெரியப்படுத்துவது அவசியம்.

# பௌர்ணமி விழா

(கரவெட்டி)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா நாளை மாலை 6.30 மணிக்கு ஜெயச்சந்திரன் மண்டபத்தில் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஆயுர்வேத மருத்துவர் வைரமுத்து பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். சிறப்புச் சொற்பொழிவாக மாற்றங்களும் நாமும் என்ற தலைப்பில் துணுக்காய் கல்வி வலய தமிழ்மொழி ஆசிரிய ஆலோசகர் வேல் நந்தகுமார் நிகழ்த்துவார். (எ)

# 172 இந்திய மீனவர்கள் நேற்றுவரை விடுதலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. நேற்று விடுதலை செய்யப்பட்ட 32 மீனவர்களுடன் 172 இந்திய மீனவர்கள் கடந்த மூன்று நாட்களில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 32 இந்திய மீனவர்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவிற்கமைய ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார நேற்று விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கடற்படையினரால் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 32 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவைப்பிறப்பித்தார். அவர்களின் படகுகளும் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் நாகப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் ஆகிய பகுதிகளிலிருந்து 8 படகுகளில் வந்த 32 இந்திய மீனவர்கள் கடந்த 3 ஆம் திகதி நெடுந்தீவிற்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து காங்கேசன்துறைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் இந்திய கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் இலங்கை கடற்படையினர் இன்னும் சில நாட்களில் கையளிக்கவுள்ளனர்.

இதேவேளை நேற்றுவிடுதலை செய்யப்பட்ட மீனவர்களுடன் கடந்த மூன்று நாட்களில் 172 இந்திய மீனவர்களை யாழ்.ஊர்காவற்றுறை நீதவான நீதிமன்றம் மற்றும் மன்னார் நீதவான் நீதிமன்றம் என்பன விடுதலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# ஐ.ம.சு.கூட்டமைப்பிலிருந்து கமலேந்திரன் நீக்கப்பட்டார்

## உதவித் தேர்தல் ஆணையாளர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் கந்தசாமி கமலேந்திரனை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அங்கத்துவத்தில் இருந்து நீக்கியமை தொடர்பாக கந்தசாமி கமலேந்திரனுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேரதல் ஆணையாளர் பொன்னுத்துரை குகநாதன் தெரிவித்தார்.

இந்தக் கடிதமானது, தேர்தல் திணைக்களத்தினால் கந்தசாமி கமலேந்திரனின் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாண சபையின் செயலாளரிடமிருந்து வட மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவரின் பதவி நிலைமை தொடர்பாக பதில்கள் கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொள்ளுமென யாழ்.மாவட்ட உதவித தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து கமலேந்திரன் நீக்கப்பட்டமை தொடர்பில், கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவினால் தேர்தல் ஆணையாளர் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே. என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு ஏற்கெனவே கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# ஹெலியிலிருந்து பூச்சொரிதல்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பண்ணாகம் விசவர்த்தனை முருகமூர்த்தி ஆலயத்திற்கு உலங்கு வானூர்தியில் இருந்து பூச் சொரியும் நிகழ்வு நாளை காலை 11.45 மணியளவில் இடம் பெறவுள்ளது. (எ)

# மெய்வல்லுநர் திறனாய்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி SMART KIDS சிறுவர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் கே. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (2)


# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தில் தலைவர் பா. ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலக உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் க. ரேணுகாவதி, சிறப்பு விருந்தினர்களாக போரூட் நிறுவனப் பணிப்பாளர் எம். எஸ்.மலிக்கார், ராகம் திட்ட முகாமையாளர் லோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-9-10)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### வேலைச்சுமையிலிருந்து விடுதலை

வேலையிலிருந்து விடுதலை என்பது வேலையிலிருந்து விடுதலை என்பதல்ல. இது வேலைச்சுமையிலிருந்து விடுதலையாகும். நமக்கு விடுதலை கிடைத்துவிட்டால் நமக்குச் சரியானதொரு மன அமைப்பு கிடைத்துவிடும். இந்த மனம் அனைத்துப் போராட்டங்கள், விருப்பு வெறுப்புக்கள், கட்டுப்பாடுகள் போன்ற பலவற்றிலிருந்தும் தனிப்பட்டு விருப்பத்துடன் வேலையைச் செய்வதற்கு வேண்டிய பிராணசக்தியை பெற்றுவிடுவோம். இந்த விடுதலைக்குப்பிறகு நாம் செய்யும் எச்செயலிலும் மகிழ்ச்சியே இருக்கும். எடுத்துக்காட்டாக நாம் எந்தவொரு வேலையைப் பற்றிச் சிந்தித்தாலும் அந்த வேலையைச் செய்வதற்கு முன்பே அந்த வேலையின் சுமையை நாம் பெறுவதில்லை. ஆகவே நாம் எதனைச் செய்தாலும் நாம் முழுமனதுடன் ஈடுபடுவோம். எனவே முழுமை கொண்டிருக்கும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## செயலில் அன்பிருக்கட்டும்



- தாயும், தந்தையும் எப்போது மகிழ்ச்சி அடைகிறார்களோ, அப்போது கடவுளும் மகிழ்ச்சி அடைகிறார். அதனால், பெற்றோர் பெருமை கொள்ளும் விதத்தில் வாழுங்கள்.
- அறிவோடு ஒன்றிவிடும்போது தான் பிழைகளைப் போக்க முடியும். இந்த முடிவை அறிவியலும் ஏற்றுக் கொள்கிறது.
- தன்னைத் தானே வெறுக்கத் தொடங்கும் மனிதனுக்கு, அழிவுக்கான வாசல்கள் திறக்கப்பட்டு விட்டதாகப் பொருள்.
- அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியை கொண்டு வந்தே தீரும்.
- தன்னிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப்போல, அதை விலக்கும் சக்தியும் மனதிற்கு உண்டு. அதனால் வேண்டியதை ஏற்கவும், வேண்டாதவற்றை தள்ளவும் செய்யுங்கள்.
- கருணையே இனிமையான சொர்க்கம். மக்கள் அனைவரும் கருணை நிறைந்தவர்களாக மாறினால் பூமியே சொர்க்கமாகி விடும்.
- ஒன்றைப் பெற்றுக் கொள்பவனுக்குப் பெருமை இல்லை. கொடுப்பவன் தான் பேறு பெற்றவனாகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயப் பெருவிழா நேரடி அஞ்சல்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்ச தீவு புனித அந்தோனியார் ஆலய பெருவிழா இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் நாளை காலை 6.30 மணிவரை நேரடி அஞ்சல் இடம்பெறவுள்ளது.

இச்சேவையினை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத் தாபனத்தின் யாழ். சேவையினர் நடத்தவுள்ளனர்.

இதனை 90.1 MHz மற்றும் 104.9 MHz அலைவரிசையூடாகவும் www.Slbc.lk என்ற இணையத் தளத்தினூடாகவும் அறியலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## ஆண்டு விழா

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்ததின ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குநீர்வேலியிலுள்ளஸ்ரீகணேச அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவை ஸ்ரீ கணேச அறநெறிப் பாடசாலையுடன் தாவடி, இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையம் இணைந்து நடத்தவுள்ளது. (2)

## பயிற்சித்திட்டத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை தேசிய அருங்கலைகள் பேரவை நடத்தும் யாழ்.மாவட்ட பெண்களுக்கான சுயதொழில் பற்றி பயிற்சித் திட்டத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும்.

பாரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க பங்கு பற்றலுடன் நடைபெறும். (2)

# வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களில் இந்துசமய விரதங்களின் தீர்மான முடிபுகள்

ஜய வருடத்திற்கான வாக்கியம் மற்றும் திருக்கணிதம் ஆகிய பஞ்சாங்கங்களின் படி

(அ) சித்திராபூரண விரதம்

(ஆ) சித்திரகுப்த விரதம் (சித்திரைக் கஞ்சி)

(இ) ஆனி உத்தரம்

(ஈ) சங்கடஹர சதுர்த்தி

(உ) நவராத்திரி விரதம்

(ஊ) கார்த்திகை தீபம்

என்பவற்றிற்கான திகதிகளில் தோன்றியுள்ள முரண்பட்ட கருத்துக்கள் பற்றி ஆராயப்பட்டதாக இந்து சமய கலாசார அலுவலகத்தின் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு அறிவித்துள்ளார்.

எனவே இவற்றை எந்தெந்த திகதிகளில் அனுஷ்டிக்க வேண்டும் என்பது சம்பந்தமாக பொது மக்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அகில இலங்கை இந்துமா மன்றம் ஆகியவற்றின் வழிகாட்டலை நாடியிருப்பதால் இதுபற்றி ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய 13.01.2014 அன்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்ட தற்கிணங்க மேற்படி கூட்டம் அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2மணிக்கு ஆரம்பமானது.

இதன்பிரகாரம் இந்து சமய விரதங்களைத் தீர்மானிப்பதற்கான பொதுவிதிகள்,

ஒரு மாதத்தில் ஒரே திதி இரு தடவைகள் வரும் போது பின்னுள்ள திதியிலே விரதங்கள் அனுஷ்டிக்கப்படல் வேண்டும். எனினும் பின்னுள்ள திதியில் சங்கிராந்தி தோஷம் ஏற்படின் முன்னுள்ள திதியைக் கைக்கொள்ளலாம். ஆனால் திதி வரும் இருநாட்களுக்கும் சங்கிராந்திதோஷம் ஏற்படின் பின்னுள்ள திதியை கைக்கொள்ளல் வேண்டும். (காமிக ஆகம விதிப்பிரமாணம்)

நட்சத்திரமானது பூரணையுடன் சேர்ந்திருந்தால் அதை விசேடமாகக் கருதி அத்தினத்தை விரதங்களுக்கு கைக்கொள்ளல் வேண்டும்.

ஒரு மாதத்தில் ஒரே திதி இரு தடவைகள் வரும் பொழுது ஆலயங்களின் உற்சவங்கள் தொடர்பான நிகழ்வுகளுக்கு முன்வரும் திதியும் பிதிர்க்கடன்களுக்குப் பின் வரும் திதியையும் கைக்கொள்ளல் வேண்டும்.

**இதில் (அ) சித்திரா பூரணை விர தம் (சித்திரா பௌர்ணமி)**

ஜய வருடத்தில் சித்திரை மாதம் முதலாம் திகதி (14.04.2014 திங்கட்கிழமை) அன்றும் சித்திரை 31 ஆம் திகதி (14.05.2014 புதன்கிழமை) அன்றும் பூரணைத்திதிகள் வருகின்றன.

பொது விதி 01 (அ) இல் குறிப்பிட்டதற்கிணங்க பின்னுள்ள திதியையே கைக்கொள்ளல் வேண்டும்.

எனவே, சித்திரா பூரணை விரதம் அனுஷ்டிப்போர் மற்றும் சித்திரா பூரணையில் சிரார்த்தம் செய்வோர் 14.05.2014 (புதன்கிழமை) அன்று நிறைவேற்றுதலே பொருத்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படியும் 14.05.2014ஐயே சிராத்த திதியாக ஏற்றுக்கொண்டுள்ளமையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

**(ஆ) சித்திர குப்த விரதம்**

பிறந்த தினங்கள் நட்சத்திரத்தை அடிப்படையாகவும் இறந்த தினங்கள் திதியை அடிப்படையாகவும் கொண்டு அனுஷ்டிக்கப்படவேண்டியவை.

சித்திரை மாதத்தில் - சித்திர நட்சத்திரம் 15.04.2014 (செவ்வாய்க்கிழமை) அன்றும் 12.05.2014 (திங்கட்கிழமை) அன்றும் வருகின்றது. எனினும் முன்னுள்ள நட்சத்திரம் பூரணையுடன் சேர்ந்து வருவதால் பொதுவிதி 01- (அ) இன்படி 15.04.2014 (செவ்வாய்க்கிழமை) அன்றே சித்திர குப்த விரதம் அனுஷ்டிக்கப்படல் வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**(இ) ஆனி உத்தரம்**

இதன்படி ஜயவருட ஆனி உத்தரம் 04.07.2014 வெள்ளிக்கிழமை ஆகும்.

**(ஈ) சங்கடகர சதுர்த்தி**

இவ்விரதம் ஒவ்வொரு மாதமும் அனுஷ்டிக்கப்படுகிறது. எனினும் ஜய வருடத்தில் வைகாசி மற்றும் ஆடி மாதங்களில் மட்டும் இரு பஞ்சாங்கங்களும் முரண்படுகின்றன. ஏனைய மாதங்களில் முரண்பாடு இல்லாததால் இவ்விரு மாதங்களில் வரும் சங்கடகர சதுர்த்தி சம்பந்தமாகவே விடைய ஆய்வு செய்யப்பட்டது.

ஜய வருடத்தில் வைகாசி மாதத்தில் 17.05.2014 (சனிக்கிழமை) அன்றும் ஆடி மாதத்தில் 13.08.2014 (புதன்கிழமை) அன்றும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**(உ) நவராத்திரி விரதம்**

ஜய வருட நவராத்திரி விரதம் 25.09.2014 (வியாழக்கிழமை) அன்றே ஆரம்பமாதல் வேண்டுமென ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஜய வருடத்தினை நவராத்திரி எட்டு தினங்களையும் 9 ஆம் நாள் விஜய தசமியுடனும் நவராத்திரி விரதம் நிறைவு பெறும். இதன்படி 25.09.2014 ஆரம்பமாகி 02.10.2014 இல் நவராத்திரி விரதம் நிறைவுபெறும். விஜய தசமி 03.10.2014 ஆம் திகதி நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது.

**(ஊ) கார்த்திகைத் தீபம்**

இதன் விதிமுறைப்படி

05.12.2014 (வெள்ளிக்கிழமை) குமாராலய தீபமும் திருக்கார்த்திகை விரதமும்

06.12.2014 (வெள்ளிக்கிழமை) சர்வாலய தீபமும் , 06.12.2014 (சனிக்கிழமை) விஷ்ணு ஆலய தீபமும் இரண்டும் ஒரே நாளில் கடைப்பிடிக்கப்படலாமென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

04. தீர்மானங்கள்

ஜய வருடத்தில் இருபஞ்சாங்கங்களின் முரண்பாடுகள் தொடர்பாக சபையோரால் ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

அ) சித்திர பூரணை விரதம் - 14.05.2014 (புதன்கிழமை)

ஆ) சித்திர குப்த விரதம் - 15.04.2014 (செவ்வாய்க்கிழமை)

இ) ஆனி உத்தரம் - 04.07.2014 (வெள்ளிக்கிழமை)

ஈ) சங்கடஹர சதுர்த்தி விதம்

வைகாசி மாதம் 17.05.2014 (சனிக்கிழமை)

ஆடிமாதம் 13.08.2014 (புதன்கிழமை)

உ) நரவாத்திரி விரதம் ஆரம்பம் 25.09.2014 (வியாழக்கிழமை) நிறைவுநாள் மகாநவமி 02.10.2014 மற்றும் விஜயதசமி 03.10.2014

ஊ) கார்த்திகைத் தீபம்

குமாராலய தீபம் - 05.12.2014 (வெள்ளிக்கிழமை)

சர்வாலய தீபம் - 06.12.2014 (சனிக்கிழமை)

விஷ்ணு ஆலய தீபம் - 06.12.2014 (சனிக்கிழமை) இரண்டும் ஒரே நாளில்

கோவில் உற்சவங்களைப் பொறுத்தவரை பொதுவிதி 01 - (இ) இன்படி மாதத்தில் முன்வரும் திதியில் மேற்கொள்ளலாம்.

தொடர்ந்து சபையோரின் கருத்துக்களை கோரி பெற்றுக் கொண்ட பின் பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது. சகலரது கருத்துக்களும் பஞ்சாங்கங்களின் முரண்பாடுகள் தீர்க்கப்படல் வேண்டுமெனவும் பஞ்சாங்கக் கணிதர்களுடன் கலந்துரையாடி பஞ்சாங்கங்கள் அச்சிட முன்னரே விரத நாட்கள், விழாக்கள் என்பன முரண்பாடற்ற விதத்தில் தீர்மானிக்க இந்து சமய கலாசாரத் திணைக்களத்துடன் சேர்ந்து அகில இலங்கை இந்துமா மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே ஆடி மாதத்திற்கு முன் இரு பஞ்சாங்கக் கணிப்பாளர்களையும் அழைத்து கலந்தாலோசனை செய்தல் வேண்டும். (2)

# கால்நடைகள் மேய்கின்ற புற்றரைகள் விசமிகளால் நாசம்



(கரணவாய்)

வடமராட்சிபிரதேசத்தில் கால்நடைகள் மேய்கின்ற வெளிகளிலுள்ள புற்களை இனந்தெரியாதோர் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

இதன்படி, கரவெட்டி கிழக்கு, மத்தி பகுதியிலுள்ள, 25 ஏக்கர் மேட்டு நிலத்தில் காணப்பட்ட புல்வெளி கடந்த புதன்கிழமை தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் நேற்று முன்தினம் கரணவாய் காவில் வயல் பகுதியில் காணப்பட்ட புற்றரைகள் தீயிடப்பட்டுள்ளது.

இந்நாசகாரச் செயலினால் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த கால்நடைகள் கயிற்றினை அறுத்துக் கொண்டு சிதறியுள்ளன.

அத்தோடு, கால்நடைகளுக்கு இனிவரும் காலங்களில், உணவின்றி திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளதாக கால்நடை உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வழமையாகவே, கரவெட்டி, கரணவாய் பிரதேசங்களிலுள்ள கால்நடைகள் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக மேற்குறித்த வெளிகளிலேயே புற்களை மேய்ந்து வருகின்றன.

விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்நாசகாரச் செயலினால் கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுத்து இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறாமலிருக்க வழிவகுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-60)

## கரவெட்டி பிரதேச சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு அறிவித்துள்ளார்.

இதன்படி, நெல்லியடி நகர்ப் பகுதியில் தற்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ் அபிவிருத்தித் திட்டத்தில் வடிகால் அமைப்பினை சரியான முறையில் முன்னெடுப்பதற்காக புதிய குழு தெரிவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டு குழுவும் தெரிவானது.

அத்தோடு, உடுப்பிட்டி ஆயுர்வேத வைத்தியசாலையினை புதிதாக அமைப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட காணியின் பத்திரம் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, உடனடியாக காணி உரிமையாளர்களோடு தொடர்பு கொண்டு காணிப்பிரச்சினையை நிவர்த்தி செய்யும் பட்சத்தில் பிரதேச சபையினரால் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென சபையினரால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாலுசந்தி கட்டவேலி பகுதியிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைக்கான மருந்துகள் முடிவடைந்துள்ளதாக சபையில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, மருந்து கொள்வனவிற்காக ஒரு இலட்சம் ரூபா நிதி சபையினரால் வழங்கப்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-9-60)


## காணி/ வீடு விற்பனைக்கு

காணி விற்பனைக்கு
பெரியபரந்தன்
பெரியபரந்தனில் 12 ஏக்கர் நெற்செய்கைக் காணி உடன் விற்பனைக்குண்டு (சிறு போகத்திற்கு இரணைமடு குளநீர் பாய்ச்ச முடியும்)
(A/009)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பு 13 குளி காணி (கிணறு , பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு.
(A/004)

காணி விற்பனைக்கு
கொடிகாமம்
கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி (தென்னை. மா. பனைகளுடன்) உடன் விற்பனைக்கு.
(A/005)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் 1 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு.
(A/006)

காணி/ வீடு விற்பனைக்கு
கோப்பாய்
கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 2 பரப்பு 16.5 குழி காணியுடன் (தென்னை, மா, பலா, தோடை என. பயன் தரு மரங்களுடன்), உடன் விற்பனைக்கு உண்டு.
(A/007)

காணி/ வீடு விற்பனைக்கு
திருநெல்வேலி
திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அண்மையில் 7 பரப்பு காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு (40 தென்னை. மா பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு
(A/008)

றியல் எஸ்ரேற் இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000/-

அலுவலக நேரம் 8.30 - 12.30, 1.30- 5.00 மணிவரை வெள்ளிக்கிழமை விடுமுறை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கல்முனையில்...

பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் கலந்து கொண்டு ஜனாதிபதிக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினார்கள்.

நேற்று நண்பகல் ஜும்மா தொழுகையின் பின்னர் கல்முனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் முன்பாக ஒன்றுகூடிய முஸ்லிம்கள் அங்கிருந்து பேரணியாக கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தை சென்றடைந்தனர்.

பிரதேச செயலாளர் ஐ.எம் ஹனிபாவிடம் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் மனுவொன்றை கையளித்த பின்பு, ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தும், ஜெனிவா தீர்மானத்தை கண்டித்தும் கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் கலைந்து சென்றனர். (எ-11)

## ஐவரை மோதித்தள்ளிய...

திடீரென மோதி விபத்துக்குள்ளானது. இந்தவிபத்தினையடுத்து நிலைகுலைந்த இராணுவத்தினரின் அம்புலன்ஸ் வண்டி அவ் வீதியால் பயணித்த மூன்றுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களையும் மோதித்தள்ளியுள்ளது. இதனால் 5 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையிலும். கோப்பாய் வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவத்தையடுத்து அப்பகுதிக்கு வருகைதந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்த போது அங்குவிரைந்து வந்த இராணுவத்தினரின் பொலிஸ் பிரிவினர் இது இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட விடயம். எனவே அதை நாம் பார்த்துக் கொள்கின்றோம் என்று கூறியதையடுத்து கோப்பாய் பொலிஸ்நிலையத்தின் போக்குவரத்து பொலிஸார் உடனடியாக அங்கிருந்து வெளியேற முற்பட்டனர்.

இதனையடுத்து அங்கு கூடிய இளைஞர்கள் விபத்துக்குள்ளான வாகனத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த எதிர்ப்பு தெரிவித்த அதே வேளை பொலிஸாருடனும் இராணுவத்தினருடனும் கடுமையான வார்த்தை பிரயோகங்களில் ஈடுபட்டு முரண்பட்டுக் கொண்டனர்.

இராணுவத்தினரின் கனரக வாகனங்களில் கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்ட இராணுவத்தினர் அங்கு கூடியிருந்த இளைஞர்களை அங்கிருந்து சென்று விடுமாறு அச்சுறுத்தியுள்ளனர். இருப்பினும் விபத்து தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படும்வரை அங்கிருந்து செல்லமுடியாது என்று இளைஞர்கள் இராணுவத்தினருடனும் பொலிஸாருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கோபமடைந்த இராணுவத்தினர் மேற்படி இளைஞர்கள் மீது தடியடிமேற் கொண்டதாகவும் இதனையடுத்து அங்கு கூடியிருந்த இளைஞர்கள் நாலாபக்கமும் சித றுண்டு ஓடியதோடு, கொடடன்கள், இரும்புக்கம்பிகளுடன் இராணுவத்தினர் அங்கு அதிகளவில் பிரசன்னமாகியிருந்தனர். இதனால் அப்பகுதியில் வாகனப் போக்குவரத்தில் இடையூறு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மேற்படி சம்பவத்தையடுத்து அப்பகுதி இளைஞர்களினால் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான பா.கஜதீபனுக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்றிருந்த அவர் இராணுவத்தினரின் நடவடிக்கை குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் 500 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பாரியளவில் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தனர். வடக்கில் இராணுவத்தினரின் திடீர் சுற்றிவளைப்புகளும், இராணுவத்தினரின் தாக்குதல் சம்பவங்களும் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஜெனிவாவில் இடம் பெற்றுவரும் நிலையில் வடக்கில் இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கைகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இச் சம்பவத்தில் பி.பு உறுதன் (வயது 17). கே.நிரோஜன் (வயது 30) என்ற இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மற்றுமொருவர் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எ-6.11)

# புலிகளை உருவாக்கும் தேவை புலம்பெயர் மக்களுக்குத் தேவை

### யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளை மீளவும் உருவாக்குவது புலம்பெயர்ந்துள்ள தமிழருக்கு தேவையாக இருப்பதாக யாழ். கட்டளைத் தளபதி, கனேடிய உயர் ஸ்தானிகருக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் திருமதி ஷெல்லி வைற்றின் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பலாலி பாதுகாப்புப்படை கட்டளைத் தலைமையகத்தில் வைத்து கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவை சந்தித்தார். இவருடைய சந்திப்பின் நோக்கம் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் பற்றி அறிந்து கொள்வதாகவே அமைந்திருந்தது எனவும்.

பாதுகாப்பு நிலைமைகள் பற்றி தெளிவுபடுத்தும்போது கட்டளைத் தளபதி இங்குள்ள. சிலர் குடாநாட்டில் நிலவும் சமாதானத்தை இல்லாமலாக்க முயற்சிப்பதாக குற்றம்சாட்டியதாகவும், நாட்டை விட்டு புலம்பெயர்ந்துள்ள தமிழர்களில் சில பிரிவுகள் விடுதலைப் புலிகளுக்கு மீள இணைவு மேற்கொள்வதற்காக சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு செயற்படுவதாகவும், அது பற்றி பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேவையான சந்தர்ப்பங்களில சம்பந்தப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கமைய பொதுமக்களுக்கு, சிவில் அமைப்புகளுக்கு மற்றும அரசாங்க நிறுவனங்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க இராணுவம் ஆயத்தமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்(எ-6)

## இன்றைய போட்டி

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான இடைநிறுத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி ஆண், பெண் இருபாலாரிற்குமான எல்லே போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இட்ம்பெறவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச பதில் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ரம்மிய ராகுலன் அறிவித்துள்ளார். (கு-23)

## தடகளப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான தடகளப்போட்டிகள் இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் அவ் நிகழ்வுகள் யாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் குணேஷ் அறிவித்துள்ளார். (கு-23)

## நலன்புரி முகாம்களை சுவீகரித்து மக்களைக் குடியேற்றத் திட்டம்?

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையக் காணிகளை சுவீகரித்து அதில் மக்களை நிரந்தமாக குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இருப்பினும் நலன்புரிநிலையத்தில் தங்கியுள்ள மக்கள் அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை நேற்று மாலை வடக்கு ஆளுநர் இல்லத்தில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டத்தில் நலன்புரி நிலையங்களில் வாழும் 1223 குடும்பங்களை விரைவில் மீளக் குடியேற்றுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இக்குடும்பங்களில் 900 குடும்பங்கள் வரை காணி அற்றவர்கள் என்பதை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு அரச செலவில் காணிகளை வாங்கி குடியேற்றுவது தொடர்பாகவும், ஏனையோர்களை அவர்களது வதிவிடங்களில் குடியமர்த்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஏற்கெனவே இந் நலன்புரி முகாம்கள் அமைந்திருக்கும் காணிகளை கொள்வனவு செய்து அக்காணிகளில் காணி அற்றோரை குடியமர்த்துவதற்கு ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நலன்புரி நிலையங்களில் வாழ்வோரை துரித கதியில் மீள் குடியேற்றுவது எனவும் இது தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் அவர்களுடனான சந்திப்பின் பின் அடுத்த நடவடிக்கை தொடர்பாக ஆராய்வதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி, வட மாகாண கட்டளைத் தளபதி உதய பெரேரா, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## மீனவர் பிரச்சினைக்கு...

பட்டு வருகின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக கடந்த ஜனவரி மாதம் 27ம் திகதி சென்னை தேனாம் பேட்டையில் இந்தியா- இலங்கை மீனவர்கள் இடையே முதல்கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்ற நிலையில், அடுத்த கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் நேற்று நடத்த முடிவு செய்யப்பட்டது.

பேச்சுவார்த்தை அறிவிக்கப்பட்ட பிறகும் இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்யும் வரை பேச்சுவார்த்தையில் பங்கேற்பதில்லை எனத் தமிழக அரசு தெரிவித்தது. அதனைத்தொடர்ந்து, கொழும்பில் நேற்று நடக்க இருந்த பேச்சுவார்த்தையைப் புறக்கணித்தது.

இந்நிலையில், இரு நாட்டு சிறைகளில் உள்ள மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக இந்தியா- இலங்கை அரசுகளுக்கு இடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து, படகுகளுடன் மீனவர்கள் விரைவில் விடுவிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (எ-11)

## கிளிநொச்சி...

வரதும் உடனடியான விடுதலைக்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியும் கவனயீர்ப்புப் போராடடம் ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் சகல தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து அனைவரையும் கலந்து கொண்டு ஜெயக்குமாரியினதும் அவரது சிறிய மகளுடையதும் விடுதலைக்கு வலுச்சேர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அக்கட்சியன் தலைவர் கஜேநதிரகுமார் பொன்னம் பலம் மற்றும் அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் அறிவித்துள்ளனர். (எ-6)

# வடக்கின் போரில் கோஷ்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

கிரிக்கெட் ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு மோதலில முடிந்ததில் பலர் காயமடைந்ததோடு சிலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இப் போட்டி நடைபெற்று வரும் வேளை இரு கல்லூரி ரசிகர்களும் போதையில் மைதானத்தில் இறங்கி ரகளையில் ஈடுபட்டு போட்டியினை தொடர்ந்து நடத்த தடையாக இருந்தனர்.

இதேவேளை மைதானத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கிரிக்கெட் ரசிகர்கள் மோதலில் ஈடுபட்டதில் பலர் காயமடைந்தனர்.

ரகளையில் ஈடுபட்டவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் முயற்சி செய்த போதும் அவர்கள் பொலிஸாரோடும் முரண்பட்டு கொண்டனர். (எ-11)


## வேலைவாய்புக்கேற்ப வெளிவாரிப்பட்டக்கல்வி

கொழும்பு பல்கலைக்கழகம் வேலைவாய்புக்கேற்ற கல்வியினை வழங்குவதாக கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். இதனாலேயே பல்கலைக்கழக உள்ளக அனுமதி கிடைக்காத மாணவர்கள் மட்டுமன்றி பல்கலைக் கழகத்தில் வேறு துறைகளில் பயிலும் மாணவர்களும் வெளிவாரிகற்கை நெறியான கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறியை பயின்று வருகின்றனர். வெட்டுப்புள்ளிகள் உயர்வும் அதனால் வினாத்தாள்களில் கடினத்தன்மையின் அதிகரிப்பினாலும் தற்போது பல மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடையத் தவறி விடுகின்றனர். ஆனால் அவர்களிற்கெல்லாம் வரப்பிரசாதமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப படடக்கற்கைநெறி அமை கின்றது. அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் அடிப்படைக் கணணிப் பயிற்சிநெறியொன்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் தமது பட்டப்படிப்பை மேற் கொள்ள முடியும். இவர்கள் அரச பட்டதாரி நியமனங்களில் உள் வாங்கப்பட்டும், பல்கலைக்/ கழகங்களில் வேலை, மேற்படிப்பு என்பற்றை மேற்கொண்டும் உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் உயர்ந்த சம்பளத் துடனான பணிநிலைகளில் காணப்படுகின்றனர். யாழ் **MCS** வளாகம் மாணவர்களை மேலும் உயர்ந்தவேலை வாய்ப்பினை பெறும் பொருட்டு மைக்ரோசொப்ற் கணினிப்பொறியியலாளர், Oracle Java, Cisco, BCS, IEEE கற்கை நெறிகளையும் மேலதிக கற்கைநெறிக் கட்டணமின்றி வழங்கி வருகின்றது. தமது சிறப்பான செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து விருதினையும் வென்றிருக்கின்றது. புலமைப் பரிசில் பதிவுகளிற்கு உங்கள் பெயர், தேசிய அடையாளஅட்டை இலக்கம் என்பவற்றை 0772395895 ற்கு **SMS** அனுப்பவும். மேலதிக விபரங்களிற்கு யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** நிலையத்தில்.

முகநூலில் தொடர்வதற்கு:mcsitcampus


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் தொடர்புடை...

யட்சகர் நேற்று மதியம் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

தர்மபுரம் பகுதியில் நேற்று முனதினம் பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து இந்த இருவரும் தர்மபுரத்தில் உள்ள அவர்களது வீட்டில் வைத்துப் படையினரால் நீண்ட நேரம் விசாரணை செய்யப்பட்ட பின்னர் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில அவர்கள கைது செய்யப்பட்டனர்.

காணாமல போனோர் தொடர்பிலான போராட்டங்களில் பங்கு கொண்ட விபூசிகா என்ற சிறுமி கதறி அழுது தனது சகோதரனைத் தேடுவது காண்போர் மனதை உருகவைத்து வந்திருக்கின்றது.

இந்த நிலையில் அந்தக் காட்சிகள் சர்வதேச ரீதியாகவும் கடும் தாக்கத்தினை ஏற்படுத்திவந்த நிலையில் திட்டமிட்ட சம்பவம் ஒன்றை உருவாக்கிய படைத்தரப்பு தருமபுரத்தில் உள்ள அந்தச் சிறுமியின் வீட்டினை சுற்றி வளைத்து அந்தச்சிறுமியையும் தாயையும் பிடித்துச் சென்றிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர்கள் இருவரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப பட்டிருப்பதாக தகவலகள் வெளியாகியுள்ளன.

அந்த இருவரின் நலன்களையும் கவனிப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தாயும் மகளும் கைது செய்யப்பட்னர் என்று தெரிவிக்கப்பட்டமையை அடுத்து அவர்கள் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்குச் சென்று அது குறித்து அத்தியட்சகருடன் பேச்சு நடத்தினர்.

தாயும் மகளையும் தாங்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவிருக்கின்றனர் என்றும் அதற்கு முன்னேற்பாடாக சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையைப் பெற வேண்டியிருப்பதாகவும் பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில், சட்ட வைத்திய அதிகாரி இல்லாமையால, வவுனியா சட்ட வைத்திய அதிகாரியின் முன்னால் இருவரையும் ஆஜர செய்து மருத்துவ அறிக்கையைப் பெற ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும், மருத்துவ அறிக்கை கிடைத்ததும் பெரும்பாலும் இன்றே அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றதில் முன் நிறுத்தப் படலாம்எனவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாயும் மகளும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டால் அவரகளின் நலனைக் கவனிப்பதற்கான சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்வதில் எம்.பிக்கள் இருவரும, வடக்கு மாகாண சபையின் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, அரியரத்தினம் ஆகியோரும் நேற்று பிற்பகல் ஈடுபட்டிருந்தாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு புலிகளுடன தொடர்பு இருப்பதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-11)


**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்**

A/L 2014 பிரிவுக்கான மீட்டல்,
கடந்தகால வினா- விடை வகுப்பு
(தமிழ் ,ஆங்கில மொழி மூலம்)
செவ்வாய். வியாழன் - மாலை 4.30
மணிக்கு நடைபெறும்

**தொடர்பு: 077 36 16 798**
(C-6744) சிகரம் ஊடக இல்லம்





"உங்களுக்குள் தூங்கிக் கிடக்கும் சிங்கத்தைத் தட்டி எழுப்புங்கள்"

உங்கள் ஆற்றல்களை இனங்கண்டு தட்டிக்கொடுத்து
பொருத்தமான தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும்

**சிகரம் தொழில் வங்கி**

22-03-2014க்கு முன்னர் பதிவு செய்யுங்கள்
**மேலதிக் விபரங்களுக்கு: 0777 324 004**

Sikaram
Gateway to Education & Employment
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
www.Sikaram.lk
(C-6744)



**VACANCIES**

எமது நிறுவனத்திற்கு பின்வரும் வேலை யாட்கள் தேவை.

1) MARKETING EXCECUTIVE (MALE/FEMALE)
- உயர்கல்வி, பேச்சாற்றல்.

2) ADMINISTRATION OFFICER (FEMALE)
- உயர்தரத்தில் வர்த்தகபிரிவு, கணக்கியல் அனுபவம் விரும்பத்தக்கது.

தகுதியுள்ளவர்கள் உடனடியாக சுயவிபரக் கோவையினை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

No,11, Champion Lane,
Nanthavil Road,
Kokuvil East Kokuvil.
winstars1237@gmail.com (5820)


## நீங்கா நினைவலைகள்

28-ம் வருட நினைவலைகள் 26-ம் நாள் நினைவலைகள்



அமரர்
திரு.சரவணமுத்து விசுவலிங்கம்
(இளைப்பாறிய முன்னாள் வட மாகாணக் கல்வி ஆலோசகர்)
மலர்வு :- 21.07.1911
நிறைவு :- 30.03.1986

அமரர்
திருமதி பத்மாஜனி விசுவலிங்கம்
மலர்வு :- 02.11.1926
நிறைவு :- 18.02.2014

எம் தந்தை தாயாரின் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நித்தமும் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

திருமதி சுபத்திரா சூரியநாதன்
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (5803)

## மரண அறிவித்தல்

### செல்வி கார்த்திகேசு பரிமளம்



26/3, சோமசுந்தரம் வீதியை பிறப்பிடமாகவும் 02, மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பரிமளம் 14.03.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு பொன்னம்மா தம்பதியினரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கனகமணி, சிவபாக்கியம், சரஸ்வதி, துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 15.03.2014 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு செம்மணி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி
021 373 7583

தகவல்
சிவராசா குடும்பத்தினர்.


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 15.03.2014 | 17.03.2014 | 22.03.2014 | 24.03.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(C-6743)
Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org